# Sancta Maria

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை வெளியீடு

"சகலத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பிப்பது" (எபே. 1:10)

பாரம்பரிய கத்தோலிக்க இதழ்

மே - ஜுன் 2012




## புறஜாதியாரின் அப்போஸ்தலர்

அர்ச். சின்னப்பரின் நிருபங்கள்

அர்ச். சின்னப்பரின் பெருமை

கத்தோலிக்க அருட்கருவிகள்

# Sancta Maria

மலர்: 4 இதழ்: 3
மே - ஜுன் 2012

வெளியிடுபவர்: சங். டேனியல் குற்றூர்
ஆசிரியர்: சங். திரேஷியன் பாபு

"கத்தோலிக்கப் பத்திரிகைகளை வெளியிட்டு நேரிய கருத்துள்ளவர்களுக்கு வழங்கினால் மட்டும் போதாது; அனைவராலும் அவை வாசிக்கப்படும்படியாக, முடிந்த வரையில் அவற்றைப் பரப்புவதும், குறிப்பாக அவர்களிடம் உள்ள நச்சுக் கலந்த தீய புத்தகங்களை, கிறீஸ்தவப் பிறர்சிநேகம் தவறாமல் அகற்றியெறிவதும் அவசியம் ஆகும்." — பாப்பரசர் அர்ச். 10-ம் பத்திநாதர்



*Maria Virgo cum Christo regnat in ætérnum*

ஆதி பிதா தமது
செல்வ அன்புள்ள
மகளிவர்க்கு
ஜோதிப்பிரதாப முடி
தலையில் சூட்டினார்
ஜெயம் ஜெயமே !

நன்கொடைகள் அனுப்பவேண்டிய முகவரி :
St. Pius X Society, 8A/3, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai - 627 002
Ph: 0462 - 2586201; 2572389 e-mail: sspxindia@gmail.com

# பத்திரிகையின் பெயர் மாற்றம்

## A letter from the Publisher

April 20, 2012

Dear Faithful,

In his Holy Thursday Chrismal Mass sermon in Ecône, Switzerland, last April 5, 2012, His Excellency Bishop Bernard Fellay insisted on an important aspect of the priestly life: the priest must be constantly aware that he is only an instrument in the hands of God and of His Church. He is a live instrument, indeed, but, in the supernatural order, only an instrument. Our Superior General gave two aspects of this doctrine which are easy to understand:

1) **Grace.** It doesn't come from the priest; it flows through his hands and lips, coming from God. Sanctifying grace is a participation of the very life of God: "By these you may be made partakers of the divine nature" (II Pet. I: 4) not of the life of the priest, not his blood or energy; and actual grace is a also a supernatural help of God. The priest in giving the sacraments and sacramentals is merely an instrument in the hands of the Almighty, and that is why the main quality St Paul asks from the priest is that he may be found faithful : " Let a man so account of us as of the ministers of Christ, and the dispensers of the mysteries of God. Here now it is required among the dispensers, that a man be found faithful." (I Cor. 4:1-2).

2) **Jurisdiction.** The priest "taken from among men, is ordained for men in the things that appertain to God, that he may offer up gifts and sacrifices for sins" (Heb. 5:1). He is the man of the Church, chosen by the Church, for the Church, to bring souls to the Church, the Mystical Body of Christ, outside of which no one can be saved. It is the Church that appoints the priest a particular field of apostolate, thus gives him jurisdiction for the sacraments, and that supervises his work. St Pius X was very strict on this matter, as a bishop, a Cardinal and a Pope. He wanted no unsupervised priest particularly in Rome, in the Holy City, where this was a real problem. An application of this important issue is that, the Church, from its earliest days, has kept a close eye on books and publications of all kinds, especially those written by priests. Just as a truly edifying book written by a priest can help one grow in faith and charity, it is a sad fact that modernist priests played and are still playing a major role in this present crisis of faith by their writings before, during, and after Council Vatican II. There was, in the old Code of Canon Law of 1917, a whole section (cc.1384-1405; NC 1983 cc.823-832) concerning the censorship and the prohibition of books, and the need for priests and religious to have the permission of their superiors for any kind of publication (c. 1386, NC, c.832).

In our Society of St Pius X, we try to apply this age-old wisdom of the Church. In our Statutes, our venerable Founder, Archbishop Lefebvre assigned to the District Superior the task to "supervise all bulletins and publications issued in his district." (Statutes V, 9) It is in order to better abide by this directive that we have decided to change the name of our magazine from *Salve Regina* to **Sancta Maria**. We will certainly continue to publish books and useful material for the good of our faithful and for the defense of the true faith, but no longer under the name *Salve Regina Publications* which is no longer under the authority and control of the superiors of the Society of St Pius X.

Yours truly in the service of Our Risen Lord and of His Catholic Church.

F. Daniel Couture

Fr. Daniel Couture
District Superior

# மாவட்ட சிரேஷ்டரின் கடிதம்

*ஏப்ரல் 20, 2012*

*அன்பார்ந்த விசுவாசிகளே,*

*இம்மாதம் 5-ம் தேதி (05.04.2012) ஈக்கோனில் நடந்த திருத்தைல திவ்விய பலிபூசையின் போது வந். ஃபெலே ஆண்டகை அவர்கள் குருத்துவ வாழ்வின் ஒரு முக்கிய அம்சம் குறித்து வலியுறுத்தினார். "ஒரு குருவானவர் ஆண்டவருடையவும் அவருடைய திருச்சபையுடையவும் கரங்களில் தான் ஒரு கருவியாக செயல்படுகிறார் என்பதை எப்பொழுதும் நினைவில் இருத்துதல் வேண்டும். உண்மைதான் - அவர் ஒரு உயிருள்ள கருவி. ஆனால், சுபாவத்திற்கு மேம்பட்ட வழிகளில் அவர் ஒரு கருவி". இந்த உண்மையின் இரு பகுதிகளை நம் அதிசிரேஷ்டர் வலியுறுத்தினார். அதனை நாம் புரிந்துகொள்வது எளிது.*

**1. வரப்பிரசாதம் :** *இது குருவானவரின் கரங்களின் வழியாகவும் வார்த்தைகளின் வழியாகவும் பொழியப்பட்டினும், இது குருவானவரிடமிருந்து புறப்படுவது அல்ல. தேவ இஷ்டப்பிரசாதம் என்பது ஆண்டவரின் வாழ்வில் பங்கு பெறுவதாகும். "அவைகளால் நாம் உலகத்திலுள்ள துர்இச்சைகளின் கேட்டிற்குத் தப்பி தெய்வீக சுபாவத்திற்கு பங்காளியாகும்படி செய்கிறார்" (2 இரா. 1:4) (தேவ இஷ்டப்பிரசாதம் என்பது குருவானவருடைய வாழ்வில் அல்லது அவர் இரத்தத்தில் அல்லது அவரது சக்தியில் பங்கு பெறுவதல்ல). உதவி வரப்பிரசாதமும் ஆண்டவரிடமிருந்து வரும் இயற்கைக்கு மேம்பட்ட ஒரு உதவியே. தேவதிரவிய அநுமானங்களையும் அருளிக்கங்களையும் தரும் குருவானவர் ஆண்டவருடைய கரங்களில் ஒரு கருவியாக செயல்படுகிறார். ஆகவே தான் குருக்கள் பிரமாணிக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறார். "இப்படியாக எந்த ஒரு மனிதனும் எங்களை கிறீஸ்துநாதருடைய ஊழியக்காரராகவும், சர்வேசுரனுடைய பரம இரகசியங்களை பகிர்ந்து கொடுக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளக்கடவான். இப்போதோ பரிமாறுகிறவர்களுக்குள்ளே பிரமாணிக்கமுள்ளவர்களாக காணப்படுகிறவர்கள் யாரென்று விசாரிக்கப்படுகிறது" (1 கொரி. 4:1, 2).*

**2. அதிகார வரம்பு :** *குருவானவர், "மனிதர்களுக்குள்ளே தெரிந்துகொள்ளப்பட்டு காணிக்கைகளையும், பாவங்களுக்காக பலிகளையும் செலுத்தும்படிக்கு தேவாராதனைக்கடுத்த காரியங்களில் மனிதருக்கு சனுவாக ஏற்படுத்தப்படுகிறார்" (எபி. 5:1). அவர் திருச்சபையின் மனிதர். திருச்சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர். திருச்சபைக்கான மனிதர். ஆன்மாக்களை திருச்சபைக்கு கொண்டுவருவதற்காக ஏற்படுத்தப்பட்ட மனிதர். திருச்சபை ஆண்டவரின் ஞான சரீரம். திருச்சபைக்கு வெளியே இரட்சண்யமில்லை. திருச்சபைதான் ஒரு குருவானவரை ஒரு குறிப்பிட்ட அப்போஸ்தலிக்க பணிக்கு நியமிக்கிறது. இதன் மூலம் அவருக்கு அதிகாரம் வழங்குகிறது. அவரது பணியைக் கண்காணிக்கிறது. பரி. 10-ம் பத்திநாதர் மேற்றிராணியாராக இருந்த போதும், கர்தினாலாக இருந்த போதும், பாப்பரசராக இருந்த போதும் இந்த காரியத்தில் மிகவும் கண்டிப்பாக இருந்தார். மேற்பார்வைக்கு உட்படாத எந்த குருவும் இருக்கக்கூடாது என்றார். குறிப்பாக உரோமையில் இருக்கவே கூடாது என்றார். காரணம் உரோமையில் இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. எனவேதான் திருச்சபை பூர்வக்காலம்தொட்டு எல்லாவிதமான புத்தகங்களையும், வெளியீடுகளையும், குறிப்பாக குருக்கள் எழுதும் புத்தகங்களை மிக நுணுநுணுக்கமாகக் கண்காணித்து வந்துள்ளது. எப்படி ஒரு குருவானவர் எழுதிய நல்ல புத்தகம் மக்களை விசுவாச, பக்தி வாழ்வில் வளர உதவிபுரியுமோ அதுபோல நவீன குருக்கள் 2-ம் வத். சங்கத்திற்கு முன்பும், சங்கம் நடக்கும்போதும், சங்கம் முடிந்த பின்பும் எழுதிய, எழுதுகிற புத்தகங்கள் இன்றைய திருச்சபையின் நெருக்கடிக்கு வழிவகுத்துள்ளன என்பது கசப்பான உண்மை. அதனால்தான் 1917-ல் வெளியிடப்பட்ட பழைய திருச்சபை சட்டத்திலும் (1384 - 1405), புத்தகங்களை தணிக்கைச் செய்யவும், தடை செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 1983-ல் வெளிவந்த புதிய சட்டத்தில் குருக்களும், துறவிகளும் புத்தகங்களை எழுதவும், வெளியிடவும் தங்கள் மேலதிகாரிகளின் அனுமதியைப் பெறவேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. (புதியச் சட்டம் 823-832).*

*அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையும் திருச்சபையின் இந்த நீண்ட கால முறையினைப் பின்பற்றுகிறது. சபைச் சட்டத்தில் நமது வண. நிறுவனர் லெஃபவர் ஆண்டகை அந்தந்த மாவட்டங்களில் வெளியாகும் வெளியீடுகளை மாவட்ட சிரேஷ்டர் கண்காணிக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார். (சட்டம் V-9). ஆகவே இந்த நெறிகளைப் பின்பற்றி நமது சால்வே ரெஜினா என்று இதழ்* **சாங்க்தா மரியா** *என்ற பெயர் மாற்றம் பெறுகிறது. தொடர்ந்து நமது விசுவாசிகளின் நன்மைக்காகவும் வேத சத்தியங்களைக் காக்கவும், புத்தகங்களையும், வெளியீடுகளையும் வெளியிடுவோம். ஆனால், சால்வே ரெஜினா வெளியீடு என்ற பெயரில் அல்ல. காரணம் அது அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் தற்போது இல்லை.*

*உயிர்த்த ஆண்டவரின் மற்றும் அவரது திருச்சபையின் பணியில் உங்கள் உண்மையுள்ள,*

F. Daniel Couture

மாவட்ட சிரேஷ்டர்

*22.04.2012*
நல்லாயன் ஞாயிறு

அன்பார்ந்த வாசகர்களே,

கடந்த இதழில் ஒரே கருத்துடைய பல கட்டுரைகள் வெளியிட முயற்சித்திருப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். உங்களில் பலர் இந்த முயற்சிக்காக தங்களது ஜெபங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தீர்கள். அதற்கு நன்றி கூறுகிறேன். நமது பத்திரிகைக்காக நீங்கள் ஜெபிப்பது மிகவும் நல்லது, வரவேற்கத்தக்கது. அதிகமான கட்டுரைகளும், மிக முக்கியமான பல காரியங்களையும் சேர்க்க வேண்டுமென்று நாங்கள் விரும்பினாலும், மரத்தில் எறிந்த கல் ஒரு சில பழங்களை மட்டுமே தட்டி விழச்செய்ய முடிவது போல சில கட்டுரைகளை மட்டுமே வெளியிட முடிகிறது.

இந்த இதழில் அர்ச். சின்னப்பர் பற்றிய கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. காரணம்? அவருக்கு "கிறீஸ்துவின் அளவறுக்கப்படாத ஐசுவரியங்களை... புறஜாதியாருக்கு சுவிசேஷமாய் பிரசங்கிக்க அருளப்பட்டது" (எபே. 3:8). இது மிகவும் சிறப்பு மிக்கது. இவரைப்பற்றி புதிய ஏற்பாட்டில் நமதாண்டவரே வெளிப்படுத்துகிறார்: "இவன் புறஜாதிகளுக்கும், இராஜாக்களுக்கும், இஸ்ராயேல் புத்திரர்களுக்கும் முன்பாக நம்முடைய நாமத்தைக் கொண்டுபோவதற்கு நாம் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்... நமது நாமத்தினிமித்தம் அவன் எம்மாத்திரம் பாடுபட வேண்டுமென்று நாம் அவனுக்குக் காண்பிப்போம்" (அப்.நட. 9:15-16).

ஏன் அர்ச். சின்னப்பர் "பாத்திரம்" என்று அழைக்கப்பட்டார்? இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் முதன்மையான சிலவற்றை மட்டும் காண்போம். பாத்திரம் என்றால் என்ன? பாத்திரம் என்பது சிலவற்றைக் கொண்ட ஒரு எத்தனம். இந்த பாத்திரத்தின் மதிப்பானது கூடுவதும் குறைவதும் அந்தப் பாத்திரத்தினுள் இருக்கும் பொருளைப் பொருத்தது. நாம் நமதன்னை கன்னிமாமரியை "ஞான பாத்திரம்" என்றும், "மகிமைக்குரிய பாத்திரம்" என்றெல்லாம் போற்றுகிறோம். ஆம்! அவர்கள் மகிமை நிறைந்த பாத்திரம்தான். ஏனெனில் அவர்கள் தன்னுள் நமதாண்டவராகிய சேசு கிறீஸ்துவையே கொண்டிருந்தார்கள். அதுபோல அர்ச். சின்னப்பர் விஷயத்தை எடுத்துக்கொள்வோமானால் அவரும் ஒரு பாத்திரமாக இருக்கிறார். ஏனெனில் அவர் "கிறீஸ்துவின் அளவறுக்கப்படாத ஐசுவரியங்களை" பிரசங்கிக்க வேண்டியருந்தது. இதனை அவர் தம் வாழ்நாள் முழுவதும் செய்தார். "நான் கிறீஸ்துவை... சிலுவையில் அறையுண்ட கிறீஸ்துவைப் போதிக்கிறேன்" என்று கூறுகிறார். ஆம்! இருதயத்தின் நிறைவிலிருந்தே வாய் பேசும். அர்ச். சின்னப்பர் கிறீஸ்துவைப்பற்றி எப்போதும் பேசுகிறார் என்றால் அவர் இருதயம் முழுவதும் கிறீஸ்துவால் நிரப்பப்பட்டிருந்தது அதற்காகவே அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். "எனக்கு லாபமாயிருந்த இந்தக் காரியங்களை கிறீஸ்துநாதரைப்பற்றி நஷ்டமென்று எண்ணினேன். இதுவுமன்றி என் ஆண்டவராகிய சேசு கிறீஸ்துவை அறிகிற உன்னதமான அறிவைப்பற்றி நான் எல்லாவற்றையும் நஷ்டமென்று மதிக்கிறேன். அவருக்காக எல்லாவற்றையும் இழந்துவிட்டு, அவைகளை குப்பையென்றும் எண்ணுகிறேன்" (பிலிப். 3:7-8) என்று அவர் கூறுகிறதினாலேயேதான் அர்ச். கிறீஸ்சோஸ்தோம் அருளப்பர் அர்ச். சின்னப்பரைப்பற்றி குறிப்பிடுகையில் "**Cor Pauli - Cor Christi**, **சின்னப்பரின் இருதயம் – கிறீஸ்துவின் இருதயம்**" என்று கூறுகிறார். அர்ச். சின்னப்பரின் இருதயத்தை அறிந்தால் சேசுவின் திரு இருதயம் எப்படிப்பட்டது என்று அறியலாம்! என்பது இதன் பொருள். இது எத்தகைய உயரிய புகழ்ச்சி! எத்தகைய மதிப்பும் மரியாதையும் உடைய வாக்கியம் இது!!

ஆகையினால்தான் இந்த இதழ் முழுவதையும் "புறவினத்தாரின் அப்போஸ்தலரான" அவருக்கு அர்ப்பணித்துள்ளோம். இதன் மூலமாக நாம் அவரைப் பின்பற்ற இயலும். இதனால் அவரது அடிச்சுவட்டைப் பின்சென்று கிறீஸ்துவைப் பின்பற்றுகிறவராவோம். அவரே இந்த உண்மையை இவ்வாறு கூறுகிறார்: "நான் கிறீஸ்துவினுடையவனாதலால் நீங்களும் என்னைப் பின்பற்றி, அவ்வாறு இருங்கள்". ஆகவே நாம் கிறீஸ்துவினுடைய அன்பை கண்டுபாவிப்பதற்காக அர்ச். சின்னப்பரை அறிந்துகொள்வோமாக! அப்படியானால் அவரைப்போல, கிறீஸ்துவை நேசிப்பதிலிருந்து எதுவும் நம்மை பிரிக்காதிருப்பதாக. கிறீஸ்துவின் மீதான உண்மையான அன்பு நம்மிடம் இருக்குமானால் "கிறீஸ்துநாதருடைய சிநேகத்தைவிட்டு நம்மைப் பிரிக்கப்போகிறது யார்?" (உரோ. 8:35) என்று சொல்வதற்கு தகுதியைக் கொண்டவர்களாவோம்.

Benedicamus Dómino

Fr. Therasian +

**சங். திரேஷியன் பாபு**
**அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை**

# அர்ச். சின்னப்பரின் பெருமை

வந். பிரான்சிஸ் தியூர்சியூஸ் ரோச் ஆண்டகை

“ஆயரின் குரலொலி” யிலிருந்து எடுக்கப்பட்டது

அன்பார்ந்த சகோதரர்களே! பிள்ளைகளே! இவ்வருஷ தபசுகால நிருபத்தின் நோக்கம், அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் மனந்திரும்பிய அற்புத சம்பவத்தை விளக்கிக் காண்பித்து, நாம் எல்லோரும் நம்மால் கூடியமட்டும் அவரைக் கண்டுபாவிக்கவேண்டும் என்பதே.

அர்ச். சின்னப்பர் சிலீசியா மாகாணத்தின் பிரதான மான பட்டணமாகிய தார்ஸஸ் நகரில் பிறந்தவர். அவருடைய இயற்பெயர் சவுல். பெஞ்சமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர். உரோமை நகர்வாசிகளுடைய சுதந்திரங்களுக்கு உரித்தானவர். மனத் திட்பமும் வாக்கு வன்மையும், புத்தி தீட்க்ஷணியமும் வாய்ந்தவர்; குள்ளமானவர். தலையில் உரோமம் இல்லாதவர். முரட்டுத் துணியில் கூடாரஞ் செய்வதில் பண்பட்டவர். இளமையில் ஜெருசலேம் நகர் சென்று அக்காலத்தில் பிரசித்திப் பெற்று விளங்கின கமாலியேல் என்னும் வேத சாஸ்திரியிடம் யூத வேத சட்டதிட்டங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த பெரிய பரிசேயன். முதல் வேதசாட்சியான அர்ச். முடியப்பரை கல்லால் எறிந்து கொன்றவர்களுடைய வஸ்திரங்களைத் தமது பாதத்தருகில் வைத்து அந்தக் கொலை பாதகத்திற்கு உடன்பட்டவராயிருந்தவரும் இவரே.

இத்தகைய மத வைராக்கியங் கொண்ட பரிசேயனான சவுல் என்பவர் மனந்திரும்பி, பெரிய அப்போஸ்தலரானது எங்ஙனம்? இது தேவ வரப்பிரசாதத்தின் வேலையேயன்றி வேறல்ல. “அவருடைய வரப்பிரசாதம் என்னிடத்தில் வீணாய்ப் போகவில்லை. எல்லோரையும்விட அதிகமாய் நான் வேலை செய்தேன். ஆயினும், நானல்ல; என்னோடு சர்வேசுரனுடைய வரப்பிரசாதமே அப்படிச் செய்தது.” *(1 கொரி. 15:10).*

## சவுல் அற்புதமாய் மனந்திரும்பின வரலாறு


அர்ச். சின்னப்பருடைய சீஷனாகிய அர்ச். லூக்காஸ் என்பவர் அப். நடபடி ஆகமம் ஒன்பதாம் அதிகாரத்தில் இவ் வரலாற்றை விரிவாக எழுதியுள்ளார். இந்த அதிசய சம்பவத்தை கவனமாய்க் கேட்டு ஒரு சிறிதேனும் தியானிக்கிறவர்கள் யாராயினும் பெருத்த நன்மை அடைவார்களென்பது உறுதி. “சவுல் என்பவர் இன்னும் ஆண்டவருடைய சீஷர்களை பயமுறுத்திக் கொலை செய்யும் படி சீறிக்கொண்டு பெரிய குருவினிடத்தில் போய் இந்த மார்க்கத்தாரான எந்த ஆண் களையும் பெண்களையும் தான் கண்டால், அவர்களை கட்டி எருசலேமுக்கு கொண்டுவரும்படி தாமாஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டார். அப்படியே அவர் பயணமாய்ப் போய், தமாஸ்குக்குச் சமீபித்தப்போது நடந்ததேதெனில்: திடீரென வானத்திலிருந்து ஓர் ஒளி சூழ்ந்து பிரகாசிக்கவே அவர் தரையிலே விழுந்து; “சவுலே, சவுலே, ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்?” என்று தன்னை நோக்கிச் சொல்கிற சப்தத்தைக் கேட்டார்.

அப்பொழுது அவர்: “ஆண்டவரே, நீர் யார்?” என்று கேட்க,

அவர்: “நீ உபத்திரவப்படுத்துகிற சேசுநாதர் நாமே; தாற்றுக்கோலை எதிர்த்து உதைக்கிறது உனக்குக் கடினமாம்” என்றார்.

இதைக் கேட்டு அவர் நடுநடுங்கி பிரமித்து: “ஆண்ட வரே, நான் என்ன செய்யும்படி சித்தமாயிருக்கிறீர்?” என்றார்.

ஆண்டவர் அவருக்கு மாறுத்தாரமாக: “நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ; நீ செய்ய வேண்டியது இன்ன



அர்ச். சின்னப்பர் மனந்திரும்பும் காட்சி

தென்று அங்கே உனக்குச் சொல்லப்படும்'' என்றார்.

அப்பொழுது அவரோடு கூட பிரயாணஞ் செய்த மனிதர்கள் சப்தத்தைக் கேட்டாலும், ஒருவரையும் காணாமல் பிரமித்து நின்றார்கள். அப்பொழுது சவுல் தரையினின்று எழுந்து தன் கண்களை திறந்தும் ஒன்றும் காணாதிருந்தார். ஆகையால் அவர் கையைப் பிடித்துத் தமாஸ்குப் பட்டணத் திற்கு கூட்டிக் கொண்டு போனார்கள். அங்கே அவர் மூன்று நாளளவாக கண் தெரியாதவராய், சாப்பிடாமலும், குடியா மலும் இருந்தார். அப்பொழுது தமாஸ்கு பட்டணத்தில் அனனியா என்னும் பெயருள்ள ஓர் சீஷனிருந்தார். ஆண்டவர் தரிசனத்தில் அவரை நோக்கி:

''அனனியாவே '' என்க,

அவர்: ''ஆண்டவரே இதோ அடியேன்'' என்றார்.

அப்பொழுது ஆண்டவர் அவரை நோக்கி: ''நீ எழுந்திருந்து நேர் வீதியென்னும் தெருவுக்குப் போய், தார்சு நகரத்தானாகிய சவுல் என்பவனை யூதாவின் வீட்டிலே விசாரி. ஏனெனில், இதோ அவன் ஜெபஞ் செய்கிறான்'' என்றார். (அப்பொழுது சவுல்) அனனியா என்னும் ஒரு மனிதன் உள்ளே பிரவேசிக்கிறதையும், தான் பார்வையடையும்பொருட்டு தன்மேல் கரங்களை நீட்டி வைக்கிறதையும் தரிசித்தார்.

அனனியா பதில் மொழியாக: ''ஆண்டவரே, இந்த மனிதன் ஜெருசலேமில் உம்முடைய அர்ச்சியசிஷ்டவர் களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கேயும் உமது நாமத் தைத் தொழுகிற சகலரையும் பிடித்துக் கட்டும்படி பிரதான ஆசாரியர்களிடத்தில் இவன் அதிகாரம் பெற்றிருக்கிறானே!'' என்றார்.

அதற்கு ஆண்டவர்: ''நீ போ; ஏனெனில், இவன் புற ஜாதிகளுக்கும் இராஜாக்களுக்கும் இஸ்ராயேல் புத்திரருக்கும் முன்பாக நம்முடைய நாமத்தைக் கொண்டுபோவதற்கு நாம் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். நமது நாமத்தி னிமித்தம் அவன் எம்மாத்திரம் பாடுபடவேண்டுமென்று நாம் அவனுக்குக் காண்பிப்போம்'' என்றார்.

ஆகையால் அனனியா என்பவர் போய் அந்த வீட்டில் பிரவேசித்து அவர்மேல் கைகளை வைத்து: ''சவுல் சகோதரரே, நீர் வந்த வழியில் உமக்குத் தரிசனையான ஆண்டவராகிய சேசுநாதர், நீர் பார்வையடையவும், இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்படவும் என்னை அனுப்பினார்'' என்றார்.

உடனே அவருடைய கண்களிலிருந்து செதிள்கள் போன்றவை விழவே அவர் பார்வையடைந்து எழுந்து ஞானஸ்நானம் பெற்றார். பின்னும் அவர் போஜனம் பண்ணிப் பலமடைந்தார்; மேலும், அவர் தமாஸ்கு பட்டணத்திலிருந்த சீஷர்களோடு சில நாள் தங்கியிருந்து, தாமதமில்லாமல் சேசு நாதரே சர்வேசுரனுடைய சுதன் என்று ஜெப ஆலயங்களில் பிரசங்கித்துவந்தார்.

அவர் பிரசங்கிக்கிறதைக் கேட்ட யாவரும் பிரமித்து: இந்த நாமத்தைத் தொழுகிறவர்களை ஜெருசலேமில் உபத்திர வப்படுத்தினவன் இவனல்லோ? இங்கேயும் அப்படிப்பட்ட வர்களைக் கட்டி, பிரதான ஆசாரியர்களிடத்திற்கு இழுத்துக் கொண்டு போகும்படி வந்தவனல்லோ என்றார்கள். சவுலோ மென்மேலும் திடன்கொண்டு, கிறீஸ்துவானவர் இவரே யென்று உறுதிப்படுத்தி தமாஸ்குப் பட்டணத்தில் வசித்திருந்த யூதரைக் கலங்கடித்தார். (அப்.நட. 9:1-22).

அன்பார்ந்த சகோதரர்களே! பிள்ளைகளே!

இந்த அற்புத வரலாற்றைக் வாசித்த பிற்பாடு எப்பேர்ப்பட்ட பெரும் பாவியானாலும் அதைரியப்படலாமா? அவநம்பிக்கைப்படலாமா? கொடிய வேத விரோதியாகிய சவுலை மனந்திருப்பித் தமக்கு உகந்த அப்போஸ்தலராக மாற்றிய தயாளம் நிறைந்த சேசுவின் திருக்கரம் இப்போது குறுகிவிட்டதா? ''சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்பப் படுத்துகிறாய்?'' என்று சொன்ன குரலானது இன்றைக்கும் உன்னைப் பார்த்து: ''ஏன் என்னை உபாதிக்கிறாய்?'' என்று சொல்லுகிறதை நீ கேட்கிறதில்லையா? நீயும் சவுலைப் போல் ''ஆண்டவரே! நீர் யார்?'' என்று கேள். ''நீ உபத்திரவப் படுத்துகிற சேசு நாமே'' என்பார். ஏனென்றால், சத்திய திருச் சபையானது சேசுவின் நேச பத்தினி. திருச்சபையை விரோதிக் கிறவன் திவ்விய சேசுவை உபாதிக்கிறான். மேற்றிராணி மார்கள், குருக்கள், சேசுவின் பிரதிநிதிகள். அவர்களை நிந்திக் கிறவன் இரட்சகரை நிந்திக்கிறான்.

அஞ்சா நெஞ்சு படைத்த சவுல் நடுநடுங்கி, ''ஆண்ட வரே! நான் என்ன செய்யும்படி சித்தமாயிருக்கிறீர்?'' என்று கேட்டாரல்லோ? அவருக்கு கிடைத்த மறுமொழியென்ன? ''நீ எழுந்து பட்டணத்திற்கு போ; நீ செய்யவேண்டியது இன்னதென்று உனக்குச் சொல்லப்படும்''. அப்படியே



அர்ச். சின்னப்பர் ஞானஸ்நானம் பெறுதல்

கீழ்ப்படிந்து சவுல் சென்றார்; அனனியாவைக் கண்டார்; வேண்டிக்கொண்டார்; ஞானஸ்நானம் பெற்றார்; கண்கள் திறக்கப்பட்டன; போஜனம் அருந்தினார்; பலம் அடைந்தார்.

## பாவி சவுல் பரிசுத்த பவுலாக மாறினார்

இனிமேல்: "கிறீஸ்துநாதர் எனக்கு ஜீவன், மரணம் எனக்கு ஆதாயம். ஜீவிக்கிறேன் ஆனால் நானல்ல; கிறிஸ்து நாதர் என்னிடம் ஜீவிக்கிறார். நான் கிறீஸ்துநாதரைக் கண்டு பாவித்ததுபோல நீங்களும் என்னைக் கண்டுபாவிக்க வேண்டுமென்று உங்களை மன்றாடுகிறேன்" என்பார்.

சவுல் எழுந்திருந்து, ஜெபதபம் பண்ணி, அனனியா என்பவரிடம் போய், ஞானஸ்நானம் பெற்று, கண் பார்வை யடைந்து, போஜனம் அருந்தி, பழைய மனிதனைக் களைந்து புதிய மனிதனைத் தரித்து, தேவ சிநேக அக்கினியினால் மூட்டப் பட்டு, நாலாபக்கமும் சென்று சிலுவையில் அறையுண்ட திவ்விய சேசுவைப் பிரசங்கித்து, பெரிய அப்போஸ்தலராய்த் திகழ்ந்து, பல்லாயிரம் ஆத்துமாக்களை இரட்சித்ததுபோல் நீங்களும் இந்த தபசுக்காலத்தில் தேவகிருபையினால் ஞானப் பிரகாசம் அடைந்து, பாவ சமயங்களைவிட்டு விலகி, ஜெபதபஞ் செய்து, குருவானவரிடம் சென்று நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்விய நன்மை உட்கொண்டு கத்தோலிக்க ஊழியத்தில் ஈடுபட்டு, ஞான அதிகாரிகளோடு ஒத்துழைத்து, சத்தியமறை செழித்தோங்கும்படி பிரயாசைப்பட வேண்டும். இதுமாத்திரமல்ல:

அர்ச். சின்னப்பர் மனந்திரும்பின பிற்பாடு: "இவன் புறஜாதி ஜனங்களுக்கும் இஸ்ராயேல் புத்திரருக்கு முன்பா கவும் நம்முடைய நாமத்தைக் கொண்டு போவதற்கு நாம் தெரிந்து கொண்ட பாத்திரம். நமது நாமத்தினிமித்தம் அவன் எம்மாத்திரம் பாடுபட வேண்டுமென்று நாம் அவனுக்குக் காண்பிப்போம்" என்று முன்னறிவித்தார் நமது திவ்விய மீட்பர்.

அதுபோலவே, யூதர்களுக்கும், புறஜாதி ஜனங் களுக்கும் வேதத்தைப் போதிக்கும்படி மும்முறை நீண்ட பிரயாணங்கள் செய்தார். இவரைப்போல எந்த அப்போஸ்த லரும் உழைக்கவில்லை. இவரைப்போல் எவரும் துன்பப் படவில்லையென்று சொன்னால் மிகையாகா. எல்லோரையும் கரையேற்றும்படிக்கு எல்லோருக்கும் எல்லாமானவர். ஆத்துமாக்களை இரட்சிக்கும் பொருட்டு தம்மை முற்றிலும் அர்ப்பணித்தவர்.


அர்ச். சின்னப்பரின் வேதசாட்சியம்

அவர் பட்ட பாடுகளையும் அவருக்குண்டான ஆபத்துக்களையும் சிறிது அறியவேண்டுமேயானால் அவர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் சொல்லுகிறதைக் கேளுங்கள்:

"வேலைகளில் மிச்சமாயும், சிறைகளில் மிகுதியாயும், அடிகளில் மட்டுக்கு மிஞ்சியும், மரண ஆபத்துக்களில் அடிக்கடியும் உட்பட்டவன். யூதர்களால் ஒன்று குறைய நாற்பது அடியாக ஐந்து தரம் அடிபட்டேன். மூன்று தரம் பிரம்புகளால் அடிபட்டேன். ஒரு தரம் கல்லால் எறியப் பட்டேன். மூன்று தரம் கப்பல் சேதத்தில் அகப்பட்டேன். ஒரு இரவும் பகலும் ஆழ்ந்த கடலில் போக்கினேன். அடிக்கடி பயணஞ் செய்ததினாலே, ஆறுகளின் ஆபத்துக்களிலும் கள்வரின் ஆபத்துகளிலும், என் ஜாதி ஜனத்தால் வந்த ஆபத்துக்களிலும், அன்னிய ஜனத்தால் வந்த ஆபத்துக்களிலும், பட்டணங்களில் நேரிட்ட ஆபத்துக்களிலும், வனாந்தரத்தில் உண்டான ஆபத்துக்களிலும், சமுத்திர ஆபத்துக்களிலும், கள்ளச் சகோதரர்களால் வந்த ஆபத்துக்களிலும், பிரயாசை களிலும், துன்பங்களிலும், அநேக முறை கண் விழிப்பிலும், பசி தாகத்திலும், அநேக முறை உபவாசங்களிலும், குளிரிலும் நிர்வாணத்திலுமிருந்தேன்.

"புறத்திப்பட்ட இவைகளையுமல்லாமல், எல்லா சபை களையும் பற்றிய கவலையானது என்னை அநுதினமும் பீடிக்கின்றது. ஒருவன் பலவீனனானால் நானும் பலவீன மாகிறதில்லையோ? ஒருவன் இடறினால் என் மனம் எரிகிற தில்லையோ? நான் மேன்மைபாராட்ட வேண்டியதானால் என் பலவீனத்திற்கடுத்தவைகளைப்பற்றி மேன்மை பாராட்டு வேன். நான் பொய் சொல்லுகிறதில்லையென்று என்றென் றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவராகிய கடவுள், நம்முடைய ஆண்டவராகிய சேசு கிறீஸ்துநாதருடைய பிதாவுமாயிருக் கிறவர் அறிவார். தமாஸ்கு நகரத்தில் அரெத்தா இராஜனின் சேனைத் தலைவன் தமாஸ்கு பட்டணமெங்கும் காவல்களை வைத்து என்னைப் பிடிக்கப்பார்த்தான். அப்பொழுது நான் ஒரு கூடையிலே வைக்கப்பட்டு, ஜன்னலிலிருந்து மதில் வழியாய் இறக்கி விடப்பட்டு, இவ்விதமாய் அவன் கைக்குத் தப்பினேன்" (2 கொரி. 11-ம் அதி.).

அன்பார்ந்த பிள்ளைகளே!

சேசுநாதரைப் பின்சென்று பக்தியாய் நடக்க யாருக்கு மனசுண்டோ அவர்கள் யாவரும் உபத்திரவப்படுவார்கள். சேசுநாதரோடுகூட மரித்தோமானால் அவருடனே கூட உயிர் வாழ்வோம். அவரோடேகூட பாடுபட்டால் அவரோடே கூட அரசாளுவோம். இது சத்திய வாக்கு. அப்படியானால் உங்களுக்கு வியாதி வருத்தமோ, துன்ப துரிதமோ, இக்கட்டு இடைஞ்சலோ, நிந்தை அவமானமோ, பணக்கஷ்டமோ, மானநஷ்டமோ, என்ன நேரிட்டபோதிலும் பரலோகத்தை அண்ணார்ந்து பார்த்து: பிதாவே எனது மனதின் படியல்ல

உமது சித்தத்தின்படி ஆகட்டும் என்று சொல்லுங்கள். இதுவே அர்ச்சியசிஷ்டதனத்தின் அடையாளம். சிலுவையின்றிக் கிரீடமில்லை. சேசுவின் நேசம் சிலுவையின் பாசம்.



கட்டுரையாளர் :

**வந். பிரான்சிஸ் திபூர்சியூஸ் ரோச் ஆண்டகை**

அர்ச். சின்னப்பருடைய தங்கமான இருதயத்தைக் கொள்ளைகொண்டவர் சிலுவையில் அறையுண்ட நாதனே. அவர் எழுதிய 14 நிருபங்களும் இதற்கு அத்தாட்சி. இருதய நிறைவால் வாய் பேசும் இந்த நிருபங்களில் சேசுவின் திருநாமத்தை 240 தடவைக்குமேல் பிரயோகித்திருக்கிறார். அவருடைய ஞானமெல்லாமல் திவ்விய சேசு. அவர் போதித்ததெல்லாம் சிலுவையில் அறையப்பட்ட சேசு. அவருடைய நம்பிக்கையெல்லாம் இரக்கமுள்ள சேசு. அவருடைய சந்தோஷமெல்லாம் இனிமையான சேசு. அவருடைய மகிமையெல்லாம் மனோகர சேசு. சேசுவுக்காக ஜீவித்து, சேசுவுக்காக மரித்தார் அர்ச். சின்னப்பர். இதனாலல்லோ, பொன்வாய் அர்ச். கிறிசோஸ்தோம் என்பவர் **சின்னப்பரின் இருதயம் சேசுவின் இருதயம்** என்கிற பொன் மொழியால் அர்ச். சின்னப்பரைக் குறித்து சொல்லக்கூடிய புகழ்மாலையெல்லாம் சுருங்கச்சொல்லி நன்கு விளங்கப்பண்ணியிருக்கிறார்.

அர்ச். சின்னப்பருடைய இருதயம் சேசுவின் திரு இருதயமயமாய் இருந்ததினாலல்லோ சேசுவின் சகோதரர்களுக்காக தம்மை முழுவதும் தத்தம் பண்ணினார். திவ்விய சேசுவுக்காக தன்னை முழுவதும் செலவழித்து, வேதசாட்சி முடி பெற்ற சுத்த வீரன் சொன்ன வீர மொழிகளை நாமும் நமது மரணப்படுக்கையில் சொல்லக்கூடுமானால் நாம் பாக்கியவான்கள்: "நானோ இதோ பலியாகப்போகிறேன். என் தேகக் கட்டு அவிழுங் காலம் கிட்டியிருக்கிறது. நல்ல யுத்தம் செய்தேன். என் அயனத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்தேன். கடைசியாய் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. இது நீதியுள்ள நடுவராகிய கர்த்தர் அந்த மகா நாளில் எனக்குக் கொடுப்பார். எனக்கு மாத்திரமல்ல, அவருடைய வருகையை ஆசிக்கிற சகலருக்கும் அவர் அதை அளிப்பார்" (2 தீமோ. 4-ம் அதி.)

அன்பார்ந்த சகோதரர்களே! பிள்ளைகளே!

நாம் எல்லோரும் ஒருநாள் சாகவேண்டியவர்கள். கடைசி முச்சுவிடும் அந்த நாள் எப்போது வருமோ தெரியாது. நமது அந்திய நேரம் கிட்டியபோது, பாடுபட்ட சுருபத்தை நமது கையிலெடுத்து பக்தியோடு முத்திசெய்து: "என் நேச சேசுவே! உமக்காக என் ஜீவிய காலமெல்லாம் நல்ல யுத்தம் செய்தேன். விசுவாசத்தை நான் இழக்கவில்லை. இழக்காதது மாத்திரமல்ல, அந்தகாரத்தில் அமிழ்ந்திருந்த அநேகரை உமது தெய்வீக விசுவாசப் பிரகாசத்திற்கு கொண்டுவந்தேன். என் ஜீவிய காலமெல்லாம் உமது திரு இருதயமே எனது ஏக நம்பிக்கை. உமக்காக நான் அனுபவித்த துன்பங்கள் ஏராளம். எல்லாம் முற்றிலும் முடிந்தது. சேசுவின் திரு இருதயமே! உம்மை நம்பினேன். உம்மை சிநேகிக்கிறேன்" என்று கூறி கடைசி மூச்சு விடுவோமாக.

இப்படிச் செய்வோமேயாகில் நீதியுள்ள நடுவராகிய நமது நேச சேசு அப்போஸ்தலராகிய அர்ச். சின்னப்பருக்கு அளித்த நீதியின் கிரீடத்தை நமக்கும் அளிப்பார். அப்படியே ஆகக்கடவது!

திரு இருதய இராஜாவும், அவருடைய நேசத் தாய் அமலோற்பவியும், நல்ல தந்தை அர்ச். சூசையப்பரும் நம் எல்லோரையும் சம்பூரணமாய் ஆசீர்வதிப்பார்களாக.

**திருமந்திர நகர் ( தூத்துக்குடி )**

5-2-1937

**வந். பிரான்சிஸ் திபூர்சியூஸ் ரோச் ஆண்டகை**


தூத்துக்குடி மேற்றிராசனத்தின் முதல் ஆயர்

## திருச்சபையின் மன்றாட்டு



**"தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமான அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பரே, நீர் மெய்யாகவே மகிமைப்படுத்துவதற்கு உரியவர். சத்தியத்தின் பிரசங்கியே, விசுவாசத்திலும் சத்தியத்திலும் அஞ்ஞானிகளுக்குப் போதகரே, உம் வழியாய் எல்லா அஞ்ஞானிகளும் சர்வேசுரனுடைய வரப்பிரசாதத்தைக் கண்டடைந்தனர். உம்மை தெரிந்துகொண்ட சர்வேசுரனிடத்தில் எங்களுக்காக மன்றாடும்"** - (அர்ச். சின்னப்பர் மனந்திரும்பிய திருநாள் பூசை - நெடுங்கீதம்)

# நிருபங்கள் – ஓர் அறிமுகம்



நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி "Cor Pauli - Cor Christi சின்னப்பரின் இருதயம் – கிறீஸ்துவின் இருதயமாக இருக்கிறது". கிறீஸ்துவை முழுமையாக அறிந்துகொள்ள முதலில் அர்ச். சின்னப்பரை அறியவேண்டும். சின்னப்பரின் இருதயத்தை – அவரது சிந்தனைகளை அறியவேண்டுமானால் அவரது நிருபங்களை நாம் வாசிக்கவேண்டும். இக்கட்டுரையில் அவரது (அனைத்து) 14 நிருபங்களைப்பற்றிய சுருக்கமான அறிமுகக் குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. இவை அர்ச். சின்னப்பரின் நிருபங்களை நன்கு புரிந்துகொள்ள நமக்கு உதவுமென்பது திண்ணம் – ஆசிரியர்.

## உரோமருக்கு எழுதிய நிருபம் | கி.பி. 58

*கர்த்தர் மனுஷாவதாரமான 58-ம் வருஷத்தில் அர்ச். சின்னப்பர் கிரேசியா நாட்டின் தலைநகரமாகிய கொரிந்து நகரத்திலிருந்து இந்த நிருபத்தை எழுதினார். இதை எழுதின முகாந்தரம் என்னவென்றால், அக்காலத்திலே உரோமாபுரியிலிருந்த புதுக் கிறீஸ்தவர்களுக்குள்ளே சிலர் யூத வேதத்திலும் சிலர் அஞ்ஞானத்திலுமிருந்து மனந்திரும்பினவர்களாய் இருந்தார்கள். அப்படியிருக்க, யூதர்கள் தாங்களே மோயீசன் வேதத்தைக் கைக்கொண்ட பூர்வீக வேதக்காரர்களென்றும், தேவப்பிரஜைகளென்றும், தங்களுக்கே கிறீஸ்துநாதர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டாரென்றும், அந்த இரட்சகர் தங்கள் கோத்திரத்தில் பிறந்தவரென்றும் தங்களைக் கொண்டாடி, அஞ்ஞானத்திலிருந்து மனந்திரும்பினவர்களைப் புறக்கணித்து வந்தார்கள். இவர்களோவென்றால், யூதர்கள் அநியாயமாய் சேசுநாதரைச் சிலுவையிலே அறைந்து கொன்றதினாலே, சர்வேசுரன் அந்த யூதர்களைத் தள்ளி, தங்களைத் தெரிந்துகொண்டாரென்று தங்களைப் பாராட்டிப் பேசுவார்கள்.*

*ஆகையால் அந்தச் சபையாருக்குள் வாக்குவாதமும், அந்நியோந்நிய சமாதானத்துக்கு விரோதமான பொறாமையும் பொல்லாங்கும் விளைந்து கொண்டுவந்ததை அர்ச். சின்னப்பர் அறிந்து, இருதிறத்தாருடைய சடுத்தத்தையும் அடக்கும் பொருட்டு, யூதர்கள் மோயீசனுடைய வேதப்பிரமாணத்தை அநுசரியாததினாலே, அது அவர்களுக்குப் பிரயோசனமில்லாது இருந்ததன்றியே, அதனால் அவர்கள் அதிகக் குற்றவாளிகளாய்ப் போனார்களென்றும், அஞ்ஞானிகளோவெனில் தங்களைப் படைத்த சர்வேசுரனைத் தற்சுபாவமாய் அறிந்திருந்தும், அவரை வணங்கி ஆராதிக்காததினாலே அவர்களும் குற்றவாளிகள்தானென்றும், ஆகையால் இருதிறத்தாரும் சுவிசேஷத்துக்கு அழைக்கப்பட்டதினால் வீம்பு பாராட்டுவதற்கு முகாந்தரமில்லை என்றும், சேசு கிறீஸ்துநாதர் தமது விலைமதியாத திரு இரத்தத்தினாலே உலகத்தை இரட்சித்துச் சகலரையும் இலவசமாய் அழைக்கிறாரென்று விளக்கிக்காட்டும்படி இந்த நிருபத்தை எழுதினார்.*

## கொரிந்தியருக்கு எழுதிய முதல் நிருபம் | கி.பி. 57

*கொரிந்து நகரமானது கிரேசியா இராச்சியத்தின் தென்பாகமாகிய அக்காயா நாட்டின் தலைநகர் பட்டணமாம். அப்பட்டணத்தார் அக்காலத்தில் மிகுந்த செல்வமும், கல்வியறிவும் உள்ளவர்கள். அப்போஸ்தலர் நடபடி 18-ம் அதிகாரத்தில்*

கண்டிருக்கிறபடி அர்ச். சின்னப்பர் அந்நகருக்கு வந்து, அதிலே வாழ்ந்த ஒன்றரை வருஷத்துக்குள்ளே அநேகருக்கு ஞானஸ்நானங் கொடுத்தார். பின்பு அவ்விடத்தைவிட்டுச் சின்ன ஆசியாவிலுள்ள பிரதான பட்டணமாகிய எபேசுக்கு வந்து, மூன்று வருஷமளவும் அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவ்விடத்திலிருக்கையில் கர்த்தர் அவதாரமான 57-ம் வருஷத்திலே இந்த முதல் நிருபத்தை எழுதினார்.

இதை எழுதுவதற்கு உண்டான காரணம் ஏதென்றால், கொரிந்து நகரத்தாரிடத்தில் முன்னிருந்த பக்தி விசுவாசமும், புண்ணிய ஒழுக்கமும் கொஞ்சம் குறைந்துபோனதையும், அவர்கள் தங்கள் போதகர்கள்மட்டில் ஒருவரோடொருவர் வீணான தர்க்கஞ் செய்துகொண்டிருந்ததையும், அவர்களுக்குள் ஒருவன் யாவரும் அறிய துர்மார்க்கமாய் நடந்ததையும் அவர் கேள்விப்பட்டிருந்தார். மேலும் விவாகத்தையும், கன்னிமையையுங் குறித்தும், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகள், பெண்பிள்ளைகள் கோவிலில் இருக்கவேண்டிய விதம், திவ்வியநற்கருணை, இஸ்பிரீத்துசாந்துவின் வரங்கள், மரித்தோருடைய உத்தானம் ஆகிய இவைகளைக்குறித்தும் பற்பல விஷயங்களை அறியும்படி அந்தச் சபையார் அவரிடத்தில் எழுதிக் கேட்டிருந்தார்கள். அவைகளுக்கு பதில் சொல்லும்படி இந்த நிருபத்தை எழுதினார்.

## கொரிந்தியருக்கு எழுதிய 2-ம் நிருபம் | கி.பி. 57

அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபத்திலே கண்டித்த குறைகளையெல்லாம் அவர்கள் மிகுந்த பயத்தோடும் ஜாக்கிரதையோடும் நீக்கிப்பரிகரித்து, அதிக நல்லவர்களானார்கள். ஆகையால் இந்த இரண்டாம் நிருபத்தில் அவர்களைக் கொண்டாடுகிறாரொழிய, அவர்களை நோக்கி அதிகக் கண்டிப்புள்ள வார்த்தைகளை இதிலே பிரயோகிக்கக் காணோம். ஆனால் முதல் நிருபத்திலே கண்டபடியே அந்தச் சபையோருக்குள் உண்டான பிரிவினைகளுக்கும் வாக்குவாதங்களுக்குங் காரணமாயிருந்த போதகர்களுக்குள்ளே சிலர் அந்த நிருபத்தினாலே மனக்குரோதங்கொண்டு, அர்ச். சின்னப்பர்பேரில் பொறாமையடைந்து அவரை நிந்திக்கவும், அவர் அப்போஸ்தலர் அல்லவென்றும், தூரத்திலே தைரியங் காண்பித்தாலும், சமீபத்தில் வரும்போது கோழைத்தனமுள்ளவரென்றும், இவைமுதலான குறைகளை அவர்பேரில் சொல்லவும் ஏற்பட்டிருந்தார்கள். ஆகையால் இந்த நிருபத்திலே அர்ச். சின்னப்பர் அப்படிப்பட்டவர்களுடைய ஆங்காரத்தைத் தணித்து, தம்முடைய அப்போஸ்தலத்துவத்தை மேன்மைப்படுத்துகிறார். மக்கேதோனியா நாட்டின் தலைமைப்பட்டணமாகிய பிலிப்பி நகரிலிருந்து கர்த்தர் மனுஷாவதாரமான 57-ம் ஆண்டில் இதை எழுதினார்.

## கலாத்தியருக்கு எழுதிய நிருபம் | கி.பி. 55

கலாத்திய தேசமானது சின்ன ஆசியாவின் வடபுறத்திலிருந்த தேசமாம். அதிலே அர்ச். சின்னப்பர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, புறஜாதியாரில் அநேகருக்கு ஞானஸ்நானங்கொடுத்து, அநேக சபைகளை ஏற்படுத்தியிருந்தார். அந்தச் சபையார்கள் மனந்திரும்பின துவக்கத்திலே வெகு பக்தி சுறுசுறுப்புள்ளவர்களாயிருந்து, வேதத்திற்காக அநேக துன்பதுரிதங்களை மிகுந்த தைரியத்தோடே பட்டு அநுபவித்தார்கள்.

ஆனால் அர்ச். சின்னப்பர் அவர்களைவிட்டு அப்பாலே போனபின், முன் யூதர்களாயிருந்து மனந்திரும்பின சிலர் அவர்களிடத்திலே நுழைந்து, சுவிசேஷத்தோடேகூடப் பழைய ஏற்பாட்டில் கற்பிக்கப்பட்ட விருத்தசேதன முதலான சடங்குகளையும் அநுசரிக்கவேண்டும் என்று சொல்லி, அவர்களை மிகவும் கலக்கினதுந்தவிர, அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த அர்ச். சின்னப்பர் அப்போஸ்தலர்களுடைய சீஷனேயன்றி அப்போஸ்தலரல்ல என்றும், அப்போஸ்தலர்கள் போதிக்கிறபடி அவர் போதிக்கிறதில்லை என்றும், பலவிதமாய் அவர்பேரில் குறைபேசினதினாலே அச்சபையார் அந்தக் கள்ளப்போதகர்களுடைய பேச்சை நம்பி, விருத்தசேதன முதலான பழைய ஏற்பாட்டின் சடங்குகளை அநுசரிக்கத் துவக்கியிருந்தார்கள்.

அர்ச். சின்னப்பர் இவைகளையெல்லாம் கேள்விப்பட்டு, அவர்களை மறுபடியுஞ் சுவிசேஷத்தின் நன்னெறியிலே திருப்பத்தக்கதாகக் கர்த்தர் அவதாரத்துக்குப்பின் சுமார் 55-ம் வருஷத்தில் எபேசு நகரத்திலிருந்து இந்த நிருபத்தை எழுதி, அந்தக் கள்ளப்போதகர்களுடைய பொய்ப் போதகங்களை மிகுந்த திறமையோடு மறுத்து, தாம் மற்ற அப்போஸ்தலர்களிலும் அற்பமல்லவென்று ஒப்பிக்கிறார். பின்னும் பழைய ஏற்பாட்டின் சடங்குகள் ஈடேற்றத்துக்கு அவசியமும், பிரயோசனமும் உள்ளவைகளல்லவென்று பற்பல வேத உதாரணங்களால் ஒப்பித்து, நல்லொழுக்கத்துக்கடுத்த சில புத்திமதிகளையுஞ் சொல்லி நிருபத்தை முடிக்கிறார். இந்த நிருபம் உரோமாபுரியாருக்கு எழுதிய நிருபத்துக்கு ஒப்பாகவும், அதன் சுருக்கம்போலவும் இருக்கிறது.

## எபேசியருக்கு எழுதிய நிருபம் | கி.பி. 66

எபேசு நகரமானது சின்ன ஆசியாவின் பிரதான பட்டணமாம். கர்த்தர் அவதாரத்தின் 66-ம் ஆண்டில் அர்ச். சின்னப்பர் உரோமாபுரியில் சிறையிலிருக்கும்போது எபேசியருக்கு இந்த நிருபத்தை எழுதினார். மூன்று வருஷமளவும் இரவும் பகலுமாக அவர் மிகுந்த பிரயாசைப்பட்டு ஏற்படுத்திய இந்தச் சபையை விசுவாசத்தில் உறுதிப்படுத்தவும், சேசு கிறீஸ்துநாதரைப்பற்றிய உன்னதமான தேவ இரகசியங்களின் அறிவில் அவர்கள் தேறவும் வேண்டுமென்று இதை எழுதினார். ஆகையால் அவர் எழுதிய

மற்ற நிருபங்களைப்பார்க்கிலும் இந்த நிருபம் அதிக சிறந்த வாக்கியங்களும், உயர்ந்த அர்த்தங்களும் உள்ளதுமாய் மனிதருடைய வாக்குக்கெட்டாததும் சம்மனசுகளுக்குரியதுமாய் இருக்கின்றது. முதல் மூன்று அதிகாரங்களில் நித்திய அழைத்தலையும், சேசுநாதருடைய மரணத்தினால் உண்டாகிய இரட்சண்யத்தையும், புறஜாதியாருடைய அழைத்தலையும், புறஜாதியார்களுக்காக விசேஷமாய்த் தாம் அப்போஸ்தலராக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதையும், மற்ற மூன்று அதிகாரங்களில் அவனவன் தன்தன் அந்தஸ்தில் அநுசரிக்கவேண்டிய பிரதான புண்ணிய ஒழுக்கங்களையுங் குறித்துப் பேசுகிறார்.

## பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் | கி.பி. 62

பிலிப்பி நகரமானது மக்கேதோனியா நாட்டில் உரோமையர் குடியேறியிருந்த பாகத்துக்குப் பிரதான பட்டணமாம். அர்ச். சின்னப்பர் அந்தப் பட்டணத்தாருக்குச் சுவிசேஷத்தை முதலாவது பிரசங்கித்ததைப்பற்றி அப்போஸ்தலர் நடபடி 16-ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறது. அந்தப் புதுச் சபையார் எப்போதும் மிகவும் பக்தியுள்ளவர்களுமாய் அர்ச். சின்னப்பர் பேரில் மிகுந்த பற்றுதலுள்ளவர்களுமாய் இருந்ததுந்தவிர, அவர் எங்கே போயிருந்தாலும் அவருடைய செலவுக்கு வேண்டியதை அனுப்புவார்கள். அப். நடபடி 27-ம், 28-ம் அதிகாரங்களில் சொல்லியிருக்கிறது போல், அவர் முதல்விசை உரோமாபுரிக்குச் சேவகர்களால் கொண்டுபோகப்பட்டபோது அவருக்குச் சம்பவித்ததை அறியவும், அவருடைய செலவுக்குச் சில பணங்களைக் கொண்டுபோய்க் கொடுக்கவும், தங்கள் மேற்றிராணியாராகிய எப்பாப்புரோதீத்து என்பவரை அனுப்பினார்கள். அவர் அங்கே சேர்ந்து சிலநாள் அர்ச். சின்னப்பரோடேகூட இருக்கும்போது, கர்த்தர் அவதாரம் 62-ம் வருஷத்தில் அர்ச். சின்னப்பர் தமது சிறையிலிருந்தே இந்த நிருபத்தை எழுதி, அவர் கையில் கொடுத்து அவரைத் திரும்பி அனுப்புவித்தார். இந்த நிருபத்தில் அர்ச். சின்னப்பர் மிகுந்த சந்தோஷத்தோடு பிலிப்பியரை வாழ்த்தி, விசுவாசத்திலும் தர்மக் கிரியைகளிலும் அவர்கள் நிலைக் கொண்டவர்களென்று அவர்களைப் புகழ்ந்து, அவர்கள் கிறீஸ்துநாதரைப்பற்றிப் படுகிற துன்பங்களில் அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, எப்போதும் சுவிசேஷத்துக்குத் தகுதியான நடத்தையும், துன்பங்களில் தைரியமுங் கொண்டிருக்கவேண்டுமென்றும், அந்நியோந்நிய சிநேகத்திலும், சமாதானத்திலும் நிலைபெற்று, தங்களிடத்தில் வருகிற கள்ளப் போதகங்களுக்குக் காது கொடாமல், அஞ்ஞானத்தின் நடுவில் மெய்யான சுடராக நின்று விளங்கவேண்டுமென்றும் புத்திசொல்லுகிறார்.

## கொலோசியருக்கு எழுதிய நிருபம் | கி.பி. 62

கொலோசா என்கிற பட்டணம் பிரிஜியா நாட்டின் பிரதான பட்டணமாம். அர்ச். சின்னப்பர் அந்தச் சபையாருக்கு தாமேவேதத்தைப் போதியாமல், எப்பாப்புராஸ் என்பவரை அவர்களுக்கு மேற்றிராணியாராக அனுப்பி, அவர் மூலமாய்ச் சுவிசேஷத்தை அவர்களுக்குப் பிரசங்கித்ததில், அநேகர் ஞானஸ்நானம் பெற்று, பக்தி சுறுசுறுப்புள்ள சபையாராயிருந்தார்கள். அவர்களுக்கு இந்த நிருபத்தை எழுதும்படியான முகாந்தரமேதென்றால், அவர்களிடத்தில் இரண்டுவகைப் பதிதர்கள் பிரவேசித் திருந்தார்கள். அந்தப் பதிதர்களில் சிலர்: சேசுநாதரல்ல, சம்மனசுக்களே நம்முடைய இரட்சணியத்துக்குக் காரணமென்றும், வேறு சிலர்: சுவிசேஷத்தோடுகூடப் பழைய ஏற்பாட்டின் முறைமைகளையும் அநுசரிக்கவேண்டுமென்றும் போதித்தார்கள். அர்ச். சின்னப்பர் இந்த இரண்டுவகைப் பதிதர்களையும் மறுத்து, அந்தக் கிறீஸ்தவர்கள் அநுசரிக்கவேண்டிய பிரதான முறைமைகளை அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார். அவர் உரோமாபுரியில் விலங்கிலே கிடக்கிறபோது கர்த்தர் அவதாரம் 62-ம் வருஷத்தில் எழுதிய இந்த நிருபம் எபேசியருக்கு எழுதிய நிருபத்தைப்போல் மிகவும் உயர்ந்த கருத்துகள் நிறைந்ததாம்.

## தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் நிருபம் | கி.பி. 52

தெசலோனிக்கே நகரமானது மக்கேதோனியா நாட்டின் பிரதான பட்டணமாம். அர்ச். சின்னப்பர் அந்த பட்டணத் தாருக்குச் சத்திய வேதத்தைப் போதித்தது எப்படியென்று அப். நடபடி 17-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் அத்தேன் பட்டணத்திலிருக்கும்போது அந்தச் சபையாருக்குப் பல உபத்திரவங்களுண்டானதால், அவர்களைத் தேற்றவும், அவர்கள் விசுவாசம் உறுதியாயிருக்கிறதோவென்று விசாரித்தறியவும், தீமோத்தேயு என்பவரை அனுப்பினார். இவர் போய் அவர்களுடைய உறுதியான விசுவாச நிலைமையை அறிந்து சந்தோஷத்தோடு கொரிந்து நகரத்திற்கு அர்ச். சின்னப்பரிடத்தில் திரும்பி வந்து சேர்ந்தார். அந்த சமயத்தில் அர்ச். சின்னப்பர் கர்த்தரவதாரத்தின் 52-ம் ஆண்டில் இந்த நிருபத்தைத் தெசலோனிக்கேயருக்கு எழுதினார். முதல் அதிகாரத்தில் அவர்களுடைய விசுவாசத்தையும் துன்பங்களில் பொறுமையையும்பற்றிக் கொண்டாடுகிறார். 2-ம் அதிகாரத்தில் அவர்கள் பற்றிக்கொண்ட விசுவாசத்தில் உறுதியாயிருக்கப் புத்திசொல்லித் தாம் அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் போதித்த தன்மையை அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார். 3-ம் அதிகாரத்தில் அவர்கள் செய்தியை அறிய வேண்டுமென்கிற ஆசையினால் தாம் அவர்களிடத்தில் தீமோத்தேயுவை அனுப்பினதையும், அவர் திரும்பிவந்து சொன்ன நல்ல செய்திகளையும்பற்றிச் சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரஞ் சொல்லி, அவர்களுக்காகச் சர்வேசுரனை வேண்டிக்கொள்ளுகிறதாகத் தெரிவிக்கிறார். 4-ம் அதிகாரத்தில் உத்தானத்தின் நம்பிக்கையினால் கற்பு முதலான புண்ணியங்களைஅநுசரிக்கவும், 5-ம் அதிகாரத்தில் நடுத்தீர்வையின் பயத்தினால் எப்போதும் எச்சரிக்கையோடு நற்கிரியைகளினால் அதற்கு ஆயத்தமாயிருக்கவும் வேண்டுமென்று புத்திசொல்லுகிறார்.

## தெசலோனிக்கேயருக்கு எழுதிய 2-ம் நிருபம் | கி.பி. 53

முந்தின நிருபத்தை எழுதி ஏறக்குறைய ஒரு வருஷம் ஆனபின் அர்ச். சின்னப்பர் இந்த நிருபத்தை எழுதினார். இதற்கு முகாந்தரம் ஏதெனில், நடுத்தீர்க்கிற நாளைக்குறித்து முந்தின நிருபத்தில் அவர் சொன்னவைகளினிமித்தம் நடுத்தீர்க்கிற நாள் கிட்டிவந்திருக்கிறதென்று அவர்கள் எண்ணி, மிகவும் கலங்கிக்கொண்டிருந்தார்கள். இந்தத் தவறான எண்ணத்தைத் திருத்துவதற்கு விசேஷமாய் இந்த நிருபத்தை எழுதினதாகத் தோன்றுகிறது. ஆகையால் இந்த நிருபத்தின் 2-ம் அதிகாரம் முழுவதிலும் அதன்பேரில் விசேஷமாய் பேசித் தெளிவித்து, 3-ம் அதிகாரத்திலே வேறே சில புத்திகளையுஞ் சொல்லி நிருபத்தை முடிக்கிறார்.

## தீமோத்தேயுவுக்கு எழுதிய முதல் நிருபம் | கி.பி. 64

தீமோத்தேயு என்பவர் லிக்கவோனியா தேசத்தின் பட்டணமாகிய லீஸ்திரா நகரத்தில் பிறந்தவர். இவர் தகப்பன் அஞ்ஞானி; தாய் விசுவாசியான ஓர் யூத ஸ்திரீ. இவர் சத்திய வேதத்திலே வளர்ந்து இலௌகீக சாஸ்திரங்களையும் ஞான சாஸ்திரங்களையும் நன்றாய்ப் படித்து அர்ச். சின்னப்பர் அந்தப் பட்டணத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வந்தபோது அவருக்குச் சீஷன் ஆனார். அதுமுதல் அவருக்கு அவர் மிகவும் பிரியமும் நம்பிக்கையும் உள்ளவராயிருந்தபடியால், அர்ச். சின்னப்பர் அவரைத் தமக்குப் பதிலாகச் சபைகளை விசாரிக்க அடிக்கடி அனுப்புவார். அன்றியும், அவரை எபேசு நகரத்துக்கு அதிமேற்றிராணியாராக ஏற்படுத்தினார். கர்த்தர் அவதாரத்தின் ஏறக்குறைய 64-ம் வருஷத்தில் மக்கேதோனியாவிலிருந்து இந்த நிருபத்தை அவருக்கு எழுதினார். மேற்றிராணிமார்களுக்கும் குருக்களுக்கும் உள்ள கடமைகளை மிகவுஞ் சிறந்த மேரையாய் இதில் போதிக்கிறார்.

## தீமோத்தேயுவுக்கு எழுதிய 2-ம் நிருபம் | கி.பி. 66

அர்ச். சின்னப்பர் கர்த்தர் அவதாரத்தின் 66-ம் வருஷத்தில் உரோமாபுரியில் விலங்கிலே கிடக்கிறபோது இந்த நிருபத்தை எழுதினார். அவர் எழுதின நிருபங்களில் இது கடைசியான நிருபமென்று காணப்படுகிறது. இந்த நிருபத்தின் பொருள் முந்தின நிருபத்தைப்போல மேற்றிராணிமார்களுக்கு உண்டான கடமைகளைக் காண்பித்து அவைகளை உண்மையாய் நிறைவேற்றும்படிக்குப் புத்திசொல்லுகிறார்.

## தீத்துவுக்கு எழுதிய நிருபம் | கி.பி. 61

அர்ச். சின்னப்பர் கிரேத்தா என்கிற தீவிலே சுவிசேஷத்தைப் பிரசங்கித்த பிறகு தாம் அதிலே ஸ்தாபித்த திருச்சபைக்குத் தம்முடைய சீஷனாகிய தீத்து என்பவரை மேற்றிராணியாராக ஏற்படுத்தி வைத்தார். அவர் அந்தப் பட்டத்தில் அநுசரிக்க வேண்டிய பிரதான காரியங்களை அவருக்குத் தெரிவிக்கிறதற்குக் கர்த்தர் அவதாரம் 61-ம் ஆண்டில் மக்கேதோனியாவிலிருந்து இந்த நிருபத்தை எழுதினார். இதிலுள்ள பொருளைப் பார்த்தால், அவர் தீமோத்தேயு என்பவருக்கு எழுதிய இரு நிருபங்களின் சுருக்கம் போலிருக்கிறது.

## பிலமோனுக்கு எழுதிய நிருபம் | கி.பி. 62

விரிஜியா நாட்டின் பட்டணமாகிய பொலோசா என்னும் நகரத்திலிருந்த பிலமோன் என்பவர் நல்ல கிறீஸ்தவனும் ஓர் பிரபுவுமாயிருந்தார். அவரிடத்தில் அடிமையும் அஞ்ஞானியுமாயிருந்த ஒநேசிமு என்பவன் சில பொருட்களைத் திருடிக்கொண்டு உரோமாபுரிக்கு ஓடிப்போயிருக்கையில், அங்கே முதல் விசை சிறையில் அடைபட்டிருந்த அர்ச். சின்னப்பர் அவனுக்குப் புத்தியும் ஞானோபதேசமுஞ் சொல்லி ஞானஸ்நானங் கொடுத்து கர்த்தர் அவதாரம் 62-ம் வருஷத்தில் அவனை இந்த நிருபத்தோடே தன் எஜமானிடத்தில் அனுப்பினார். அந்த எஜமான் அவனை ஏற்றுக்கொள்ளும்படியாக அவனுக்கு வெகு திறமையோடு நியாயங்களைச் சொல்லிக் கேட்டுக்கொள்ளுகிறார். இதில் ஞானோபதேசத்துக்குரிய பொருள் ஒன்று மில்லாதபோதிலும், பிறர் சிநேகத்துக்குரிய உத்தமமாதிரிகை அடங்கியிருக்கிறது. இந்த ஒநேசிமு அதுமுதற் கொண்டு நல்ல கிறீஸ்தவனாய் நடந்ததுந் தவிர எபேசு நகரத்தில் தீமோத்தேயுவுக்குப் பிறகு மேற்றிராணியாராகி, உரோமாபுரியில் திராஜா என்கிற இராயன் நாளிலே வேதசாட்சியானார்.

## எபிரேயருக்கு எழுதிய நிருபம் | கி.பி. 60

அர்ச் சின்னப்பர் உரோமாபுரியில் முதல்முறை சிறையிலிருக்கும் போது கர்த்தர் அவதாரமான ஏறக்குறைய 60-ம் வருஷத்தில் இந்த நிருபத்தை யூதேயா தேசத்திலுள்ள புதுக் கிறீஸ்தவர்களான யூதர்களுக்கு எழுதினார். அவர்கள் மோயீசன் பிரமாணத்தை முழுவதும் விட்டுவிட்டுச் சுவிசேஷத்தில் அதிகமதிகமாய் உறுதிப்படும்படிக்கு மோயீசனிலும் பழைய ஏற்பாட்டின் ஆசாரியரிலும் சேசு கிறீஸ்துநாதர் மிகவும் மேன்மைப்பட்டவர் என்றும், பழைய ஏற்பாட்டின் பலிகளிலும் புதிய ஏற்பாட்டின் பலியானது மிகவும் உத்தமமானது என்றும், அநேக நியாயங்களினால் காட்டினபிறகு, நன்னடத்தைக்குரிய பற்பல புத்திமதிகளைச் சொல்லி நிருபத்தை முடிக்கிறார். இந்த நிருபம் அர்ச். சின்னப்பர் எழுதின நிருபங்களுக்குள்ளே வரிசை முறையில் கடைசியானதாகிலும், போதக விஷயத்தில் முந்தினதென்று சொல்லத்தகும்.

# அர்ச். சின்னப்பரும் குருத்துவமும்

சங். கெ. அந்தோனி சுவாமி
தூத்துக்குடி மேற்றிராசனம்

குருத்துவத்துக்குத் தேவையான அம்சங்கள் இரண்டு: மனிதனுடைய பலவீனத்தை உணர்ந்திருப்பதும், தேவ அழைத்தலுமாம். இவையிரண்டும் கிறீஸ்துவில் அமைந்திருக்கின்றன. அவர் தேவகுமாரனும் மெல்கிசதேக்கின் முறைப்படி குருவுமாவார். மெல்கிசதேக்கின் குருத்துவம் ஆரோனுடையதைவிட உயர்ந்தது. மோயீசனுடைய பிரமாணமும் குருத்துவமும் கிறீஸ்துநாதருக்கு இடம் கொடுத்தன.

**"எந்தக் குருப்பிரசாதியும் மனிதர்களுக்குள்ளே தெரிந்துகொள்ளப்பட்டு, காணிக்கைகளையும் பாவங்களுக் காகப் பலிகளையும் செலுத்தும்படிக்குத் தேவாராதனைக் கடுத்த காரியங்களில் மனிதர்களுக்குச் சனுவாக ஏற்படுத்தப் படுகிறான்".**

***"ஏனெனில் அவன் தானும் பலவீனஞ் சூழ்ந்தவனா யிருக்கிறபடியினாலே, அறிவீனரோடும் நெறி தவறுகிறவர்க ளோடும் துயரப்படுகிறவனுமாயிருக்க வேண்டும்" (எபி. 5:3).***

***"அதனிமித்தம் அவன் ஜனங்களுக்காகப் பாவப் பரிகாரப் பலி ஒப்புக்கொடுக்கவேண்டியதுபோல தனக்காகவும் ஒப்புக்கொடுக்கவேண்டியது" (எபி. 5:4).***

***"அன்றியும் ஆரோனைப்போல சர்வேசுரனாலே அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த மகிமைக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை" (எபி. 5:4).***

மேலே தரப்பட்ட வசனங்கள் எபிரேயர் மத்தியி லிருந்த குருத்துவத்தை வருணிக்கின்றன. எனினும் இவ் வசனங்கள் குருத்துவத்தின் முக்கிய, பொதுவான அம்சங் களைக் கொண்டுள்ளனவென்பதை மறுக்க முடியாது. உதாரணமாக, குரு மனுப்பேசுகிறவராயிருக்க வேண்டு மென்பதையும், குருத்துவ அலுவலில் உட்புக தேவ அழைத்தல் தேவையென்பதையும், பலி செலுத்துவது குருத்துவத்தின் முதல் அலுவல் என்பதையும் அர்ச். சின்னப்பர் கொடுத்துள்ள வியாக்கியானம் விளக்கிக் காண்பிக்கிறது.

மனிதன் தான்தானே தேவனுக்கு ஆராதனை செலுத்துவதோடு திருப்தியடையவில்லை. தன்னைவிட அதிக அருகதையுள்ளவர்கள் தன் சார்பாகக் கடவுளுக்கு ஆராதனை சமர்ப்பிக்கவேண்டுமென்ற விருப்பம் மனித உள்ளத்தில் இருக்கின்றது. மேலும் மனிதன் தனியே சீவிக் காமல் சமுதாயத்தோடு சேர்ந்து சீவிக்கிறான். சமுதாயமும் கடவுளை வழிபடவேண்டும். சமுதாயத்தின் சார்பாக தேவனுக்கு ஆராதனை செலுத்த பொது ஆள் ஒருவன் தகுதியுள்ளவன், தெரிந்தெடுக்கப்படுகிறான். சமுதாயம் வளர்ந்து பலுகியபின் ஒரு வம்சமே குருத்துவ அலுவலுக்காக ஒதுக்கி வைக்கப்படுகிறது.

குரு மக்களின் பிரதிநிதியாக கடவுள்முன் நின்று ஆராதனை செலுத்துபவர். ஆனால் கடவுளுக்கும் மனிதனுக்கு மிடையே பாவதோஷத்தால் பிளவு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிளவை இணைப்பது குருவின் முதற் கடமையாகும்.

ஆரோனின் பாவப்பரிகாரப் பலி கர்த்தருக்குப் பிரிய மில்லை. ஆதலால் தேவ குமாரன் மனிதனாய்த் தோன்றினார். மனுக்குலத்துக்காக மனுப்பேசுகிறவர் மனுக்குலத்தைச் சார்ந்தவராயிருக்க வேண்டும்.



*"பரிசுத்தமாக்குகிறவரும் பரிசுத்தமாக்கப்படுகிற வர்களுமாகிய எல்லோரும் ஒருவரிடத்திலிருந்தே வருகி றார்கள். இது காரணத்தின் நிமித்தம் அவர்களைச் சகோதரர் என்றழைக்க அவர் கூச்சப்படாமல்..........*

*"பிள்ளைகள் மாம்சமும் இரத்தமுமுடையவர்களா யிருப்பதால், அவரும் அவர்களைப் போலவே மாம்சத்துக்கும் இரத்தத்துக்கும் பங்காளியானார். ஆதலால் அவர் இரக்கமுள்ளவரும் சர்வேசுரன் மட்டில் பிரமாணிக்கமான குருப்பிரசாதியுமாயிருந்து, ஜனங்களுடைய பாவங்களைப் பரிகரிக்கும்படிக்கு சகலத்திலும் தம்முடைய சகோதரர்களுக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது" (எபி. 2:11-17).*

தம்முடைய ஏக குமாரனைப் பலியாக்கி மனுக் குலத்தை மீட்க வேண்டுமென்று சர்வேசுரன் நிச்சயித்தபோது, மக்களை தமது சகோதரர் என்று அழைக்கும் ஸ்தானத்தில் அவர் வரவேண்டியதும் அவசியமாயிற்று. பரிசுத்தமாக்குகிறவரும் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களும் ஒரே தரப்பினராயிருத்தல் வேண்டும். தேவன் மனிதனானதன் அடிப்படை இதுவே.

பாவதோஷம் நிறைந்த மக்களுக்காக ஏற்பட்ட உண்மைக் குரு அவர்களுடைய துன்பத்திலும், மரணத்திலும் பங்குகொள்ள வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் இயல்பே.

*"தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் படைத் தவர் அநேகம் புத்திரரை மகிமைக்கு அழைத்திருந்ததினாலே, அவர்களுடைய இரட்சண்யத்திற்கு காரணமானவரைப் பாடுகளால் பூரணமாக்குவது அவருக்குத் தகுதியாயிருந்தது" (எபி. 2:10).*

மக்களைக் கர்த்தரிடம் அழைத்துச்செல்ல வேண் டியவர் குருவானவர். கர்த்தர் அசுத்தமானதெதுவையும் கண்ணோக்கமாட்டார். ஆதலின் குரு முதன்முதலில் பரிசுத்த ராயிருக்க வேண்டும். பாவங்களுக்குப் பரிகாரம் செய்வதும் அவருடைய கடமையாகும்.

*"பரிசுத்தரும் மாசில்லாதவரும் அமலரும் பாவிகளி னின்று பிரிக்கப்பட்டவரும் பரமண்டலங்களுக்கு மேலாக உயர்ந்தவருமாகிய இவ்வித பிரதான குருப்பிரசாதி நமக்கு உண்டாயிருப்பது தகுதியாமே" (எபி. 7:26).*

***இயல் வேதத்தில்*** ஜனங்களே தகுதியுள்ள ஒருவனை தங்கள் பெயரால் கடவுளுக்குப் பலிசெலுத்த நியமிப்பது வழக்கம். அவ்விதம் நியமிக்கப்பட்டவன் கடவுளால் அங்கீகரிக்கப்படலாம்.

***அருள் வேதத்தில்*** ஆராதனை முறை அல்லது பலி கடவுளாலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை நிறைவேற்றுகிறவர்களும் சர்வேசுரனின் அழைத்தலின்மேல் பலியை நிறைவேற்ற முடியும். தேவ அழைத்தலின்றி கை வைக்கிறவர்கள் அக்கிரமிகள்.

*"கிறீஸ்துநாதரும் குருப்பிரசாதியாகும்படி தம்மைத் தாமே உயர்த்தவில்லை. ஆனால், நீர் என்னுடைய குமாரன். இன்று நான் உம்மை ஜெனிப்பித்தேன் என்று அவரை நோக்கிச் சொன்னவரே அவரை உயர்த்தினார்" (எபி. 5:5).*

கிறீஸ்துநாதர், மனித சுபாவம் எடுத்த நிமிஷத்தில் குருவாக அபிஷேகம் பெற்றார். அதாவது, அதே நிமிஷத்தில் மனிதனுக்காக சர்வேசுரனிடம் மனுப்பேசுகிறவரானார்.

*"நீர் மெல்கிசதேக்கின் முறைமையின்படி என்றென் றைக்கும் குருப்பிரசாதியாயிருக்கிறீர்" (எபி. 5:5-10) ; (சங். 109:4).*

ஆரோன் பிரதான குரு என்ற நிலைமை மாறினது. ஆட்கள் மாறினதுமட்டுமல்ல, ஆராதனை முறையும் மாற்றப்பட்டது. ஆரோன் பலி செலுத்தின விதம் மாறி, மெல்கிசதேக் முறைப்பிரகாரம் பலி செலுத்தப்பட வேண்டுமென்றாயிற்று.

'மெல்கிசதேக்' என்ற பதம் 'நீதியின் அரசன்' எனப் பொருள்படும். மெல்கிசதேக் சாலேம் என்ற இடத்தின் அரசன். "சாலேம்" என்ற பதம் 'சமாதானம்' என்ற அர்த்தத்தைக் கொண்டது. எனவே அவர் சமாதானத்தின் அரசன் என்றும் அழைக்கப்படுவார். மெல்கிசதேக் குருவும் அரசனுமாய் இருந்தார். அவர்:

*"இராஜாக்களை சங்கரித்துத் திரும்பிவந்த அபிரகாமுக்கு எதிர்கொண்டுபோய் அவரை ஆசீர்வதித்தார்.*


*அபிரகாமோ, இவருக்குத் தம்முடைய சகல பொருட்களிலும் பத்திலோர் பாகத்தைப் பகிர்ந்தார்" (எபி. 7:1-2).*

மெல்கிசதேக் அபிரகாமை ஆசீர்வதித்ததும், அபிரகாம் தம் உடைமைகளில் பத்திலொன்றை அன்பளிப்பாகக் கொடுத்ததும் மெல்கிசதேக் உயர்ந்த ஸ்தானத்திலுள்ளவர் என்பதை அபிரகாம் ஏற்றுக்கொண்டார் எனக் காட்டுகின்றது. எனவே கிறீஸ்துநாதருடைய குருத்துவம் லேவியருடைய குருத்துவத்தைவிட உயர்ந்ததெனப் புலனாகிறது. இதைப்பற்றி ஏழாம் அதிகாரத்தில் மிகவும் விரிவாக சின்னப்பர் எழுதுகிறார்

மெல்கிசதேக்கின் பிறப்பைப்பற்றிய விபரங்கள் வேதா கமத்தில் கொடுக்கப்படவில்லை. அவருடைய பெற்றோர்கள் பெயர்களும் நமக்குத் தெரியாது. பழைய ஏற்பாட்டில் குருத்துவ அலுவலில் ஈடுபட்டவர்கள் லேவியர்கள். ஒரே வம்சத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கவேண்டும். ஏனைய வம்சத்தவர்கள் தேவாலயப் பணிவிடைகளில் கலந்துகொள்ளக் கூடாது. மெல்கிசதேக்கும் ஒரு குருவானவர்; பலி செலுத்தி வந்தார். இவருடைய வம்ச வழியே தெரியாமலிருந்தது. வம்ச வழிக்கு விலக்காக இருந்தார். அது புதிய ஏற்பாட்டின் குருத்துவத்துக்கு அடையாளமாயிருந்தது. வம்ச வழியாகக் குருத்துவத் தொண்டில் ஈடுபடும் வழக்கம் புதிய ஏற்பாட்டில் மறைந்தது.

*"இவர் மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய பிரமாணத்தின்படி குருவாகாமல், அழியாத சீவியத்துக்குரிய வல்லமையின்படி குருப்பிரசாதியானார்.*

*ஏனெனில் நீர் மெல்கிசதேக்கின் முறைப்படி எந்நாளும் குருப்பிரசாதியாயிருக்கிறீர் என்று சத்தியமாய்ச் சொல்லப்பட் டிருக்கிறது" (எபி. 7:16-17).*






# அர்ச். குவாடலூப்பே மாதா

1531, டிசம்பர் 9–ஆம் நாளன்று, மெக்ஸிகோவிலுள்ள குவாடலூப்பே என்னும் ஊரில், ஹுவான் தியேகோ என்னும் ஒரு செவ்விந்தியனுக்கு குவாடலூப்பே மாதா காட்சி தந்தார்கள். அவர்கள் அங்கு தான் காட்சியளித்ததற்கு சாட்சியாக, இலைகள் கூட தளிர்விட முடியாத அந்த உறைபனிக் காலத்தில், டெப்யோக் குன்றின்மேல் ரோஜா பூக்களை ஏராளமாக மலரச் செய்தார்கள். அவ்வூர் மேற்றிராணியாருக்குக் அதை நிரூபிக்கும்படியாக அந்த மலர்களை ஹுவான் தமது மேலாடையில் கட்டி எடுத்துச் சென்றார். அங்கே, மேற்றிராணியார் அந்த மேலாடையில் இருந்த ரோஜா மலர்களை கையில் எடுக்கும்போது அதில் வரையப்பட்டிருந்த மாதாவின் அதியற்புதச் சித்திரத்தைக் கண்டு முழந்தாட்படியிட்டார். மாதா கேட்டுக்கொண்டபடி, காட்சி நடந்த இடத்தில், உலகிலுள்ள மிக அழகிய தேவாலயங்களில் ஒன்றாக அதைக் கட்டும்படி மேற்றிராணியார் கட்டளையிட்டார். இனி தேவதாயின் காட்சிப்பற்றிய வரலாற்றைக் காண்போம்!








**(1)** மெக்ஸிகோ நாட்டின் பழங்குடியினர் அஸ்டெக் இனத்தார்கள். அவர்கள் இன்னமும் விக்கிரகங்களை வழிபடுகிறவர்களாகவே இருந்தார்கள். அவர்களுடைய வழிபாடுகளில் மனிதர்களைப் பலியிடுவது ஒரு முக்கிய சடங்காக இருந்துவந்தது. இங்கே ஓர் அஸ்டெக் இளைஞன் அவர்களுடைய தெய்வத்திற்கு பலியிடப் படுகிறான்.

**(2)** 1519–ஆம் ஆண்டு, ஸ்பெயின் நாட்டினர் மெக்ஸிகோ மீது படையெடுத்தார்கள். அவர்கள் அஸ்டெக் இனத்தவரின் கடைசி பேரரசனான மோன்டேசுமாவைக் கைது செய்தார்கள். ஏராளமான மாசற்ற அஸ்டெக் இனத்தவர்களைக் கொடூரமாக கொன்று குவித்தார்கள்.



சாங்க்தா மரியா







**(3)** பேராசைகொண்ட ஸ்பெயின் வீரர்கள் எல்லா வீடுகளையும் கொள்ளையிட்டார்கள்; அங்கிருந்த பொன், விலையுயர்ந்த இரத்தினங்கள் மற்றும் மிகுந்த மதிப்புள்ள கற்களை வலுக்கட்டாயமாக அபகரித்துக்கொண்டார்கள். ஏராளமானோர் அவர்களுடைய கடுங்கோபத்திற்கும், சரீர இச்சைக்குரிய தீயசெயல்களுக்கும் பலியானார்கள்.

**(4)** அச்சமயம் பிரான்சிஸ்கன் துறவிகள் வேத போதகர்களாக மெக்ஸிகோவுக்குச் சென்றனர். தாங்கள் அஸ்டெக் இனத்தாரை ஸ்பெயின் படைவீரர்களின் அடக்குமுறையிலிருந்து காப்பாற்றுவதாக அவர்களுக்கு உறுதியளித்தனர்.




**(5)** அப்போது அஸ்டெக் இனத்தைச் சேர்ந்த ஓர் இளைஞனும், ஓர் இளம் பெண்ணும், இந்த வேத போதகர்களின் நோக்கங்களை குறித்துச் சந்தேகப்பட்டார்கள். அவர்கள் வேதபோதகர்கள் தந்த உறுதிப்பாடு எவ்வளவு தூரம் உண்மை என்பதை கண்டறிய விரும்பி, அவர்களுடைய தலைமை இல்லத்திற்குச் சென்றார்கள்.




**(6)** அங்கே அவர்கள் வேதபோதகர்களோடு செய்த உரையாடல், அவர்களுடைய வாழ்வுக்கு முற்றிலும் ஒரு புதிய நம்பிக்கையை வெளிப்படுத்தியது: ‘‘சர்வேசுரனையும், நம் பரிசுத்த மாதாவையும் மகிழ்விப்பதற்கு, நாம் நல்லவர்களாகவும், பரிசுத்தமானவர்களாகவும், பொறுமையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்’’ என்று அந்த வேதபோதகர்கள் அறிவுரை கூறினர். இவர்கள் இருவரும் பதிலுக்கு: ‘‘நாங்கள் விரைவில் திருமணம் செய்துகொள்ள இருக்கிறோம். குருக்களே, தயவு செய்து, அப்படிப்பட்ட ஒரு நல்ல வாழ்வு வாழ எங்களுக்கு உதவுங்கள்’’ என்று கேட்டுக்கொண்டனர்.




**(7)** சில நாட்களில் அந்த இளைஞனும், இளம் பெண்ணும் குருவிடம் ஞானஸ்நானம் பெற்றார்கள். அந்த இளைஞனுக்கு ஹுவான் தியேகோ என்றும், இளம் பெண்ணுக்கு மேரி லூஸி என்றும் பெயரிடப்பட்டது.




**(8)** ஆனால் புதிதாக திருமணம் செய்துகொண்ட தம்பதியரின் வாழ்வில் மகிழ்ச்சி சொற்ப காலமே நீடித்தது. திடீரென ஒருநாள் மேரி லூஸியை மர்மமான காய்ச்சல் ஒன்று பீடித்தது. ஹுவான் தியேகோ தன் மனைவியிடம், தன்னைத் தனியாக விட்டுவிட்டுச் சென்றுவிட வேண்டாம் என்று மன்றாடினான். அதற்கு அவள், ‘‘நான் மோட்சத்தில் உனக்காகக் காத்திருப்பேன்’’ என்று பதில் உரைத்தாள்.




**(9)** ஹுவான் தியேகோவுக்கு தன் துயரத்திலிருந்து மீண்டு வர சிறிது காலம் பிடித்தது. இரண்டு வருடங்களுக்குப் பிறகு, அவருடைய உலகக் கவலைகளின் எல்லாச் சுவடுகளும் மறைந்து போயிருந்தன. அவர் சர்வேசுரனிடம் தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து வாழ்ந்து வந்தார்.




**(10)** ஒருநாள், தியேகோ பூசை காணச் சென்றுகொண்டிருந்த போது, வழியில் மிக இனிமையான ஓர் இசையைக் கேட்டார். அவர் நிமிர்ந்து பார்த்தபோது அங்கே மிகவும் அழகான ஒரு பெண்மணி எதிரே நிற்பதைக் கண்டார். அப்பெண்மணி அவரிடம்: ‘‘என் மகனே, எங்கே போய்க்கொண்டிருக்கிறாய்?’’ என்று கேட்டார்கள். ‘‘நான் பூசை காணப் போய்க்கொண்டு இருக்கிறேன். ஆனாலும், தயவு செய்து, உங்கள் பெயரை என்னிடம் கூறுங்கள்’’ என்றார்.




**(11)** தான் பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வேசுரனுடைய மாதாவாகிய கன்னிமாமரி என்றும், தன் மகிமைக்கென ஒரு தேவாலயம் கட்ட வேண்டும் என்ற தன் விருப்பத்தை அவரிடம் வெளியிடும்படி தான் வந்ததாகவும் அப்பெண்மணி கூறினார்கள்.




**(12)** மெக்ஸிக்கோவின் மக்கள் பேரில் தனக்குள்ள அன்பைக் காட்டும்படி, ஒரு தேவாலயம் இங்கு கட்டப்படவேண்டும் என்ற தன் விருப்பத்தை மேற்றிராணியாரிடம் சென்று அறிவிக்கும்படி நம் தேவதாய் ஹுவான் டியேகோவிடம் கூறினார்கள்.

**(தொடரும்)**

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!



## தீர்க்கதரிசிகளுடைய இராக்கினியே
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் !**

*தீர்க்கதரிசிகள் என்பவர்கள் யார்? சர்வேசுரனுடைய பெயரால் பிரசங்கித்து தேவ சித்தத்தையும், இயற்கை நியாயங்களையும் கொண்டு முன்னறிய முடியாத சம்பவங்களையும் இனிமேல் வரவிருப்பதாக கடவுளிடமிருந்து தெரிந்து, அவைகளை சந்தேகத்திற்கு இடமின்றி அறிவிக்கிறவர்களே தீர்க்கதரிசிகள் ஆவர். இத்தீர்க்கதரிசி பட்டம் பழைய ஏற்பாட்டில் ஒரு சிலருக்கே உரித்தாயிருந்தது. சர்வேசுரனால் தெரிந்து கொள்ளப்பட்ட யூத ஜனங்கள் தேவனுக்கு உகந்தவர்களாய் நடக்காவிட்டால் அவர்களுக்கு வரவிருந்த சாபங்களையும், தண்டனைகளையும் முன்னறிவித்தவர்களும், மனுக்குல இரட்சண்யத்திற்காக உலகில் அவதரிக்கவிருந்த மெசியாவின் பிறப்பையும், பாடுகளையும், மகிமையையும்பற்றி பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எடுத்துக் கூறியவர்களும் தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் கடவுளின் கருவிகள், வாய் என்றும், சர்வேசுரனின் தூதர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.*

### தீர்க்கதரிசிகளின் உள்ளத்தில் தேவதாய் !


*இத்தகைய தீர்க்கதரிசிகளில் சிலர் தேவதாயைப்பற்றி தெளிவாகவும், உவமைகளாகவும் அறிவித்துள்ளனர். பரிசுத்த வேதாகமத்தில் அர்ச். கன்னிமரியாயைக் குறிக்கும் தீர்க்கதரிசன வசனங்களுக்கு அளவேயில்லை. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம். "ஒரு ஸ்திரீ சூரியனை ஆடையாக அணிந்திருந்தாள். அவளுடைய பாதங்களின் கீழ் சந்திரனும், அவளுடைய சிரசின்மேல் பன்னிரு நட்சத்திரங்களுள்ள ஓர் கிரீடமும் இருந்தது..." (காட்சி. 12:1). அர்ச். அருளப்பர் கண்டுரைத்த ஸ்திரீயானவள் யார்? சந்தேகமற கன்னி மாமரிதான். இப்படி மாதாவைப்பற்றிய தீர்க்கதரிசன வசனங்கள் வேதாகமத்தில் அநேக இடங்களில் காணலாம். கன்னிமரியாய் இவ்வுலகில் தோன்றுவதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே, அவர்களைப்பற்றிய இத்தகைய தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாடு புத்தகங்களில் உள்ளன. ஆக, கன்னிமாமரி தீர்க்கதரிசிகளின் உள்ளங்களில் அவர்கள் பிறக்கும் முன்பே இருக்கிறார்கள் என்றல்லவா பொருள் கொள்கிறது. இந்த தீர்க்கதரிசிகள் கடவுளின் வாய் - கருவிகள் என்று கொண்டாலும், தேவ அன்னை சர்வேசுரனின் சித்தத்தில் முன்பே இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தீர்க்கதரிசிகளிலும் உயர்ந்தவர்கள்; அவர்களது இராக்கினியாக இருக்கிறார்கள் என்று அர்த்தம் கொள்ள முடியுமல்லவா?!*

### கன்னிமரியாயைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள் !

*வேதாகமத்தில் காணப்படும் தேவ அன்னையைப்பற்றிய தீர்க்கதரிசன வசனங்களில் சிலவற்றைப் பார்ப்போம்:*

- *"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவளுடைய வித்துக்கும் பகையை உண்டாக்குவோம். அவள் உன் தலையை நசுக்குவாள்" (ஆதி. 3:15).*
- *"என் மகளே, பூவுலகிலுள்ள சகல ஸ்திரீகளுக்குள்ளும் நீ உந்நத பரம கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவள்" (யூதித்.13:23).*
- *"ஜெஸ்ஸே தண்டினின்று ஓர் தளிர் கிளம்பும்; அதின் வேரில் நின்று ஓர் புஷ்பம் எழும்" (இசாயாஸ். 11:1).*
- *"இதோ கன்னியானவள் கற்பமாகி மகவைப் பெறுவாள்; அது மனுவேலன் என்றும் அபிதானம் பெறும்..." (இசாயாஸ். 7:14).*

*இன்னும் பல்வேறு வாசகங்களை கூறிக்கொண்டே போகலாம். அவை அனைத்தும் தேவதாயின் அமலோற்பவத்தை, முப்பொழுதும் கன்னிமையை, மீட்பரின் தாயான அவர்களது மேன்மையை, மாதாவின் விண்ணேற்பை, அரசதன்மையை உணர்த்தும். இவற்றின்படி பார்த்தால் தேவ அன்னை சகல தீர்க்கதரிசிகளிலும் உயர்ந்து, அவர்களின் அரசியாக இருக்கிறார்கள் என்பது புரியும். அதுமட்டுமல்லாது தேவதாயே ஒரு தீர்க்கதரிசியாக இருக்கிறார்கள்! ஆம். ஆகையால்தான் அவர்கள் தமது கீதத்தில் (Magnificat) "...இதோ இக்காலமுதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" (லூக். 1:48) என்று தம்மைப்பற்றி கூறினார்கள். இது எத்துனை உண்மை! ஆம் மரியாய் தலைமுறை, தலைமுறையாக மக்களால் வாழ்த்தப்படுகிறார்கள். இனிமேலும் மக்கள் வாழ்த்துவார்கள். ஆகவே நாமும் தேவ அன்னையை* **தீர்க்கதரிசிகளின் இராக்கினியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்** *என்று பிரார்த்திப்போமாக.*



# திரிதெந்தீன் பலிபூசையை
## அறிந்துகொள்வோம்!

### 2-ம் பாகம் - காணிக்கைகளை ஒப்புக்கொடுத்தல்
**தூபமிடுதலும், கரங்களை சுத்திகரித்தலும்**

**கரங்களைச் சுத்திகரித்தல்** (தொடர்ச்சி)

கரங்களை கழுவுதலின் மறைபொருளான உண்மை என்னவென்பது எளிதாக உணரக்கூடியதே. முழு மனிதனின் அனைத்து செயல்பாடுகளுக்கும் முதன்மையான கருவியாக கரங்கள் திகழ்கின்றன. ஆகையால், வெளியரங்கமாகக் கரங்களைச் சுத்திகரித்தலோ அல்லது விரல்களின் நுனியினை கழுவுவதோ உள்ளரங்கச் சுத்திகரத்துக்கும், முழு மனிதனின் ஆத்தும சரீர சத்துவங்கள் அனைத்தையும் தூய்மைப்படுத்துவதன் அடையாளமாகத் திகழ்கிறது *(S. Thomas. III a, q. 8.3, a . 5 ad I).*

உண்மையாகவே, வசீகரிக்கப்பட்ட விரல்களின் நுனிகளை (-கட்டை விரல்கள் மற்றும் சுட்டு விரல்கள்) சுத்திகரிப்பதான சூழ்நிலை, பொதுவாக பலியை நிறைவேற்றவிருக்கும் குருவானவர் தமது இருதயத்தை சுத்திகரிக்கவேண்டும், பாவத்தின் சிறு நிழல்கூட படியாமல் - சிறு தவறுகளுக்கும்கூட இடம் கொடாமல் இருக்கும்படி பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது (அப்போஸ்தலிக்க சட்டமுறை *VIII. Chap. II* ). ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி அது, "சர்வேசுரனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆன்மாக்களின் பரிசுத்ததனத்துக்கு ஒரு அடையாளமாக" இருக்கிறது. அர்ச். ஜெருசலேம் நகர் சிரில்: "கரங்களை சுத்திகரிப்பதானது நமது பலிக்கிருத்தியங்களின் தூய்மையினையும், குற்றமற்றத் தன்மையினையும் உணர்த்துகிறது" என்று கூறுகிறார். *(Catech. Mystag. v.n.d.)*



"எனது இருதயம் தூய்மையாயிருக்கிறது. நான் பாவமில்லாத பரிசுத்தவானாக இருக்கிறேன் என்று யார் கூற முடியும்?" (பழ.20:9). "சர்வேசுரனுடைய பார்வையில் உயிர் வாழ்கிற எந்த மனிதனும் நியாயவாதியல்ல" (சங்.142:2) என்பது உண்மைதான் என்றாலும் திவ்விய பலிபூசை நிறைவேற்றுவதற்கு குரு பரிசுத்தமாகவும், களங்கமற்றவராகவும், குற்றமற்றவராகவும், தூயவராகவும் இருக்கவேண்டும். இப்போது பூசையில் நெருங்கி வரும் மிகவும் கேந்திரமான வசீகர நேரத்திற்கான பரிசுத்த நடைமுறைகள் துவங்கப்படவிருப்பதால் குருவானவர் மிகவும் ஆழ்ந்த விதமாக தமது தகுதியின்மையை உணருகிறார். தம்மையே இன்னும் அதிகமாகத் தூய்மையாக்கிக்கொள்ள வேண்டுமென்ற அவரது ஆவல் அதிகரிக்கிறது. ஆகவே, பூசையின் துவக்கத்தில் பீடத்தின் அடியில் தமது குற்றங்களுக்காக மனஸ்தாபப் பாவசங்கீர்த்தனம் செய்து தமது ஆத்துமத்தைத் தயாரித்தது போலவே இப்போது அவரது கரங்களைச் சுத்திகரிக்கும் செயல் திகழ்கிறது.

2. குரு தமது விரல்களை கழுவிச் சுத்தம் செய்யும்போது சங்கீதத்திலிருந்து வரிகளைச் சொல்லுகிறார். அது வழிபாட்டில் சுத்திகரிப்பின் ஆழ்ந்த அர்த்தத்தைத் தெளிவாகக் காட்டுவதாக உள்ளது. குரு தூய்மையான இருதயப் பக்தியோடு இதனைச் சொல்லுகிறார். அந்தச் செபம் சங்கீதம் 25:6-12-லிருந்து எடுக்கப்பட்டது.

"*Lavabo inter innocentes.....* ஆண்டவரே, உத்தமர்களின் நடுவில் என் கரங்களைக் கழுவி, உமது பீடத்தைச் சுற்றி வருவேன்.

உமது துதியின் சத்தத்தைக் கேட்டு, உமது அதிசயங்கள் அனைத்தையும் வெளிப்படுத்துவேனாக.

ஆண்டவரே, உமது வீட்டின் அலங்காரத்தையும், உமது மகிமை வாசஞ்செய்யும் இடத்தையும் விரும்பினேன்.

சர்வேசுரா, என் ஆத்துமம் அவபக்தியுள்ளவர்களோடும், என் சீவன் இரத்தப்பிரியரோடும் சேர்ந்து நாசமாக விடாதேயும்.

அவர்களுடைய கைகளில் அக்கிரமங்கள் இருக்கின்றன. அவர்களது வலக்கை இலஞ்சத்தால் நிறைந்திருக்கின்றது.

நானோ என் கபடற்றதனத்தில் நடந்தேன். என்னை மீட்டு என்பேரில் இரக்கம் புரியும்.

என் கால் செவ்வழியில் உறுதியாய் நின்றது. ஆண்டவரே, ஆலயங்களில் நான் உம்மைத் துதிப்பேன்.

பிதாவுக்கும், சுதனுக்கும், இஸ்பிரீத்துசாந்துவுக்கும் தோத்திரமுண்டாகக்கடவது



ஆதியிலே இருந்ததுபோல் இப்பொழுதும் எப்பொழுதும் அநாதி சதா காலமும் இருக்கக்கடவது - ஆமென்."

"உத்தமர்களின் நடுவில் என் கரங்களைக் கழுவுவேன்" என்று குருவானவர் எப்படி ஜெபிக்க முடியும்? அவர் உலகத்தின் மத்தியில் வாழவில்லையோ; மனிதப் பலவீனத்தினுடையவும், வீண் கவலைகள் மற்றும் பொருட்களின் மீதான ஈர்ப்புகளும் நிறைந்த உலகத்தின் நடுவே, ஆன்ம தூய்மையின் வேட்கை (ஆவலும்) இருந்தாலும், எளிதாக அதிகமாகவோ அல்லது குறைந்த அளவிலோ தாக்கப் படுவார்கள். இது உண்மையுங்கூட. ஒரு நல்ல குருவானவர் இதனை ஏற்றுக்கொள்வார். ஆகவேதான உலகத்தின் மீதான தமது இருதயப் பற்றுதலையும், எல்லா சுயநலத்தினையும் அழித்து, தமது ஆன்மா மென்மேலும் சேசுவின் விலைமதிப் பில்லாத திரு இரத்தத்தினாலும், அவரது பாடுகள், துயரங்கள், கண்ணீர்களினாலும் தூய்மையாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் தினமும் கொண்டுள்ளார். ஆகையால்தான் குரு தமது உத்தமதனத்திற்காக தமது கரங்களை இவ்வாறு கழுவுகிறார். அவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட கரங்களோடு அவர் பீடத்தில் தமது பலிக்கிருத்தியங்களை முன்னெடுத்துச் செய்கிறார். ஆம்! சர்வேசுரனை நோக்கி ஜெபத்திலும், மன்றாட்டுகளிலும் உயர்த்த வேண்டிய அந்தக் கரங்கள் தூய்மையாக இருக்க வேண்டும். அதோடு மகா பரிசுத்த பலிப்பொருட்களைத் தொட்டு, ஏந்தி, ஒப்புக்கொடுக்க வேண்டிய கரங்கள் சுத்திகரப்படுத்தப்பட வேண்டும்.

குருவானவர் சர்வேசுரனுடைய இல்லம் மிகவும் ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருக்க விரும்புவார். ஏனெனில் அவரது இருதயம் நற்கருணையின் மகிமையில் ஆண்டவர் வசிக்கும் இடத்தில் ஒட்டப்பட்டிருக்கிறது. மகிமையின் அரசர் புறக்கணிப்பு செய்வதற்காக நமது அண்மையிலும், மத்தியிலும் குடியிருக்கவில்லை. அவரது ஆலயம் அழகுப்படுத்தப்பட வேண்டும். மீட்பரான ஆண்டவர் தமது வரப்பிரசாதத்தின் ஆசனத்தைக் கட்டியிருக்கும் இடமே குருக்களுக்கு நந்தவனமாகவும், விருப்பமான இல்லிடமாகவும் இருக்கின்றது. அங்கே துயரங்களும், வாழ்க்கையின் தீமைகளும் வெளியேற்றப்பட்டு, அவரது ஆன்மாவுக்கு ஆறுதலும், சமாதானமும், உற்சாகக்களிப்பும் பெறுவதற்காக குருக்கள் தேவனுடைய ஆலயத்தில் இருப்பார்கள். பீடத்தின் அடிப்பகுதியே தூய்மையான மகிழ்ச்சியான தெளிவான ஓடையின் ஊற்றாகத் திகழ்கிறது. அங்கே அவர் விலைமதிப்பில்லாத வரப்பிரசாதங்களைச் சேகரிக்கிறார்.

குற்றமில்லாத தெய்வீக வாழ்வை நடத்துவதே குருக்களின் ஏக கவலையாக இருக்கிறது. வரப்பிரசாதத்தின் திவ்விய நற்கருணைப் பேழையின் தனிமையில் ஆண்டவரோடு இருப்பதும், உள்ளரங்கமாய் அவரோடு சல்லாபிப்பதும் அவரது ஆவலாக இருக்கிறது. கடவுளை மறுத்து, மறந்துவிட்ட உலகில் அவருக்கு ஒன்றுமில்லை. ஆகையால் அதன் கதவுகளை அடைத்துப் போடுகிறார். அதனால்தான் உலகத்தின் தீமைகளிலிருந்து தமது ஆன்மாவையும், சரீரத்தையும் பாதுகாக்க வேண்டும் என்று ஆண்டவரை நோக்கி மன்றாடுகிறார்.

சர்வேசுரன் மீதான நம்பிக்கையில், தமது மன்றாட்டுக்கள் கேட்கப்படும் என்ற எண்ணத்தோடு நிறைந்த நன்றி பெருக்கத்துடன் என் கால் செவ்வழியில் உறுதியாய் நின்றது என்று ஜெபிக்கிறார். எப்படியெனில், துயரங்கள் இவ்வுலக ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றப்பட்டு தாம் உறுதியாக பாதுகாப்பாக, அல்லது, வரப்பிரசாதத்தினுடையவும், புண்ணியத்தினுடையவும் நேரிய வழிகளில் சர்வேசுரனை அடையும் படி நிற்கிறேன் என்று குரு உரைக்கிறார்.

(தொடரும்)

**"குரு கைகளைக் கழுவுகிறதைப் பார். பரிசுத்தவான்கள் மாத்திரம் பரம இரகசியமாகிய இப்பலிப் பூசையில் பங்கடைய முடியும் என்று நமக்கு நினைப்பூட்டவே அப்படிச் செய்கிறார்.**

**ஆ! என் தேவனே! உம்மை அண்டுவதற்கு என் ஆத்துமம் பரிசுத்தமாயிருக்க நான் ஆசிக்கிறேன். என் ஆத்துமத்தின் பரிசுத்தத்தைப் போக்கக்கூடிய சகல பாவங்களையும், பாவ ஆசைகளையும் என்னிடமிருந்து நீக்கியருளும். நீர் மாத்திரமே அதில் குடியிருக்க வேண்டும்".**



# மாதாவின் மாதம்

(மே மாதம்)

- சங். J.M. நிக்கொலாஸ் சுவாமி

தொடங்கவிருக்கும் மே மாதத்துக்காக நம்மைத் தயாரிக்கும்படி: இந்த மாதத்தை ஏன் பரிசுத்தமாகக் கொண்டாட வேண்டுமென்றும்; எவ்விதம் அதை நாம் கொண்டாடுவதென்றும் பார்ப்போம்.

*1. இந்த மாதத்தில் ஒவ்வொரு நாளையும் பரிசுத்தமாய்க் கொண்டாடுவதில் பிரமாணிக்கமாய் இருக்கவும்,*

*2. இம்மாதத்தில் ஒவ்வொரு நாளும் மரியாயின் ஏதாவது ஒரு புண்ணியத்தைக் கண்டுபாவிக்க முயன்று, அதிக உருக்கமாக ஜெபிக்கவும், அதிக பிறர்சிநேகத்துடன் இருக்கவும், நமது செய்கைகள் அனைத்தையும் உத்தமமாகச் செய்யவும்,*

*3. நமது முக்கியமான குற்றத்தை ஒழிக்க அதிக கவனத்துடன் இந்த மாதம் முழுவதும் உழைக்கவும் தீர்மானிப்போம்.*

*மரியாயின் மாதத்தை ஏற்படுத்தத் திருச்சபையைத் தூண்டிய இஸ்பிரீத்துசாந்துவை நாம் ஆராதிப்போமாக. முதலில் பக்தியுள்ள சிலருக்கும், பின் துறவிகளின் சில மடங்களிலும், பின்னர் சில பங்குவிசாரணைகளிலும், இறுதியாக உலகெங்குமே இந்த ஏவுதலை அவர் கொடுத்தார்.*

கடவுளுடைய மாதாவின் மாதம் இப்பொழுது எங்கும் அதிக உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. இந்த வளர்ச்சிக்காக கடவுளுடைய இஸ்பிரீத்துவுக்கு நாம் நன்றி செலுத்துவோம். ஏனெனில் இந்த பக்திமுயற்சியானது வரப்பிரசாதத்துக்கும் இரட்சண்யத்திற்கும் ஊற்றாகும்.

**ஏன் இம்மாதத்தைப் பக்தியுடன் கொண்டாடவேண்டும்?**

**முதற் காரணம்: மரியாயின்மேல் நமக்குள்ள நேசமே.**

**(1) அவர்கள் நம் தாய் :** தாயை மகிமைப்படுத்தும்படி குடும்பமாக ஒன்றிக்கிறோம். மே மாதத்தில் நாம் குடும்பமாகச் சேர்ந்து, நம் நேசத் தாயின் மகத்துவத்தையும், புண்ணியங்களையும், அன்பையும் நினைவுக்குக் கொண்டு வந்து கொண்டாடுகிறோம். அவர்களுக்குத் தோத்திரமாகப் பாடப்படும் அழகிய கீதங்கள் நம் உள்ளத்தை மகிழ்விக்கின்றன. மிக்க அழகு வாய்ந்த மலர்கள் நறுமணத்துடன் அவளது பீடங்களை அலங்கரிக்கின்றன. மரியாயின் மைந்தர்களாகிய நமக்கு இவை உண்மையாகவே இன்பம் அளிக்கின்றன.

**(2) மரியாயி நம் அரசி :** பேரரசியும் அன்புள்ள ஆண்டவளுமான மரியாயி, தனது மாதமாகிய மே மாதத்தில் ஒவ்வொரு நாளும் நம்மைத் தன்னிடம் அழைக்கிறார்கள். அவர்களது சிம்மாசனத்தை நாம் சூழ்ந்து நின்று நமது வந்தனைகளைச் செலுத்தி, அவர்களது பாதத்தில் நம்மை வைத்து, இன்னும் அதிகமதிகமாக அவர்களுடைய திருமகனுக்கும் அவர்களுக்கும் பிரமாணிக்கத்துடன் சேவை செய்வதாக வாக்களிப்போம்.

**(3) மரியாயி நம்முடைய பேருபகாரி:** நாம் பிறந்ததிலிருந்து பெற்றிருக்கும் உபகாரங்கள் அனைத்தும் அவர்களது கரங்கள் வழியாகவே வந்திருக்கின்றன. அவற்றிற்காக நாம் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். நமது நன்றியை நாம் பகிரங்கமாகக் காட்டவேண்டும். அதற்காக இம்மாதத்தின் ஒவ்வொரு நாளும் ஆலயம் சென்று அவர்களை மகிமைப் படுத்துகிறோம். திரிகால ஜெபம் சொல்லி ஒவ்வொரு நாளும் மூன்று முறை அவர்களை மகிமைப்படுத்துகிறோம். வாரத்தின் ஒருநாள் சனிக்கிழமை அவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. அநேகமாய் ஒவ்வொரு மாதமும் அவர்களுக்குத் தோத்திரமாக ஒரு திருநாள் வருகிறது. ஒவ்வொரு வருடமும் ஒரு மாதத்தை அவளது மகிமைக்கு அர்ப்பணிப்பது நியாயமே.

**இரண்டாவது நமது நலனை உத்தேசித்தும் இம்மாதத்தைக் கொண்டாடுகிறோம்.**

*(1) இந்த மாதத்தில் ஒவ்வொரு நாளும் மரியாயி சம்பந்தப்பட்ட பரம இரகசியங்களையும் அவள் அனுசரித்த புண்ணியங்களைப்பற்றி அதிகமாகச் சிந்தித்து, அதிக பயன் பெறலாம்; தூய்மை, மாசற்றதனம், பரிசுத்ததனம் இவற்றின் அழகிய கண்ணாடியான மரியாயிடமாய் நாம் நம்மை நோக்குகிறோம். நம்மை அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறோம். நமது குறைகளைக் கண்டு திருத்துகிறோம். அவர்களிடம் காணப்படும் அழகிய புண்ணியங்களை நேசிக்கிறோம், அவற்றை அனுசரிக்க முயல்கிறோம்.*

*(2) நம்மை நாம் திருத்த முயற்சிக்கும் இந்த வேலையில் சேசுவும் மரியாயும் நமக்கு உதவி செய்வார்கள். தம் தாயை மகிமைப்படுத்துவதில் நாம் காண்பிக்கும் ஆர்வத்துக்கு சேசு சன்மானம் அளிப்பார்;மரியாயி, நாம் அவர்களது தோத்திரத்துக்காகச் செய்வதைக் கண்டு மகிழ்வார்கள். மரியாயின் மாதமானது தபசுகாலத்தைப்போல் வரப்பிரசாதங்களின் காலம்;*

அநேக பாவிகள் மனந்திரும்புகிறார்கள், புண்ணிய பாதையில் சுறுசுறுப்பின்றி இருக்கிறவர்கள் முன்னேறும் காலம்; அநேக பங்குகள் புத்துயிர் பெறும் காலம்.

*(3)* மே மாதம் விடுமுறை காலம், ஆத்துமத்துக்கு ஆபத்தான காலம். மாதாவுக்காக மக்கள் ஆர்வத்துடன் செய்பவை இந்த ஆபத்துக்களினின்று நம்மைக் காப்பாற்றும்.

*(4)* மரியாயின் பாதுகாப்பில் நம்மை முழுவதும் வைக்க இது ஏற்ற காலம். அவர்களை மகிமைப்படுத்த எல்லா உள்ளங்களும் ஒத்துழைக்கையில் நாம், சீர்கெட்டிருக்கும் உலகத்துக்காக அதிகமதிகமாக வரப்பிரசாதங்களைக் கேட்கலாம், கிடைக்கும் என்னும் நம்பிக்கை உண்டு.



**மூன்றாவது காரணம்: இந்த மாதத்தை நாம் கொண்டாட வேண்டுமென திருச்சபை ஆசிப்பதாகும்.**

மரியாயிடமாய் நம்மை இழுக்கும் வண்ணம் மரியாயின் மாதத்தைக் கொண் டாடுகிறவர்களுக்கு ஏராளமான பலன் களை திருச்சபை அளிக்கிறது. மக்களை தேவ அன்னையை நோக்கி இழுக்கும் படி திருச்சபையானது அன்னையின் பீடங்களை அழகுற அலங்கரிக்கிறது. இனிய கீதங்களை இசைக்கிறது. நற் போதனைகளை அளிக்கிறது. இந்த மாதத்தை நாம் சிறப்புடனும் பக்தி யுடனும் கொண்டாட வேண்டுமென்று இவையெல்லாம் காட்டுகின்றன.

**மரியாயின் மாதத்தை அர்ச்சிப்பது எங்ஙனம்?**

*(1)* இந்த மாதத்துக்கென நடைபெறும் பக்திமுயற்சிகள் அனைத்திலும் ஒவ்வொரு நாளும் நாம் பங்குபெற வேண்டும். இவ்விதம் நாம் ஒன்றுகூடுவதானது மரியாயை மகிமைப் படுத்துகிறது. நமக்கும் நலன் விளைவிக்கிறது. பிறர் நமக்கு காட்டும் நன்மாதிரி, கீதங்கள், பீட அலங்கரிப்பு இவை நம் மிடத்தில் பக்தியை எழுப்புகின்றன. நாம் கேட்கும் ஞான வாசகங்களும் பிரசங்கங்களும் நம்மிடம் ஆர்வத்தை எழுப்பு கின்றன. இந்தப் பக்திமுயற்சிகளுக்காக, நாம் கோவிலுக்குப் போக முடியாவிட்டால், வீட்டிலாவது சிறு பீடம் செய்து, அன்னையின் உருவத்தின்முன் ஒவ்வொரு நாளுக்கும் குறிப் பிடப்பட்டுள்ள ஞானவாசகங்களை வாசித்துச் செபிக்கலாம்.

*(2)* மே மாதத்தின் ஒவ்வொரு நாளையும் மாதாவுக்குத் தோத்திரமான ஒரு திருநாளாக நாம் மதிக்கவேண்டும். காலையில் எழுந்ததும் மரியாயிக்கு வந்தனை செலுத்த வேண்டும். அன்றைய நாளை முழுவதும் அவளுக்கு அர்ப்பணம் செய்து, பகலில் இடையிடையே அதைப் புதுப்பிக்கவேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் உடனே எழும்ப வேண்டும். நம் செய்கைகள் ஒவ்வொன்றையும் பிள்ளையின் வெகுமதியாக மரியன்னைக்குக் கொடுப்போம். ஒவ்வொரு செய்கையுடனும் ஒரு சிறு ஜெபமும் ஒரு சிறு பரித்தியாகமும் சேர்த்தல் நல்லது; அந்த ஜெபம் நம் உள்ளத்திலிருந்து எழும்பும் ஜெபமாயிருக்க வேண்டும்; பரித்தியாகம் உள்ளத்தைச் சார்ந்ததாயிருத்தல் நலம், அதாவது நம் மனதை, நமது ஆத்திரத்தை, சுய சிநேகத்தை பரித்தியாகம் செய்வதுடன், வேடிக்கைப் பிரியம் அல்லது பயனற்ற சொற்களைத் தவிர்த்தல் போன்ற வெளிப் பரித்தியாகங்களும் செய் வோம். மரியாயைப் பகலில் அடிக்கடி நினைக்கவேண்டும்; அது நமக்கு ஆனந்தமாயிருக்க வேண்டும்.

*(3)* நாம் மனந்திரும்பவேண்டும். நம்மில் எல்லோருக்குமே இது அவசியம். இந்த நிபந்தனையுடன் மாத் திரமே மரியாயி நம் பக்திமுயற்சிகளை ஏற்றுக்கொள்வார்கள். நம்மிடம் ஒரு சிறிது நல்ல மனது இருக்குமானால், மனந்திரும்பும் வரத்தை நமக்கு மரியாயி பெற்றுத்தருவார்கள்.

*(4)* அனைத்திலும் நாம் மரியாயைக் கண்டுபாவிக்க வேண்டும். தாயைப் போல் பிள்ளை இருத்தல் நியாய மன்றோ? இது மாதாவுக்கு மிகப் பிரிய மானது. அவர்களைப்போல் அடக்க வொடுக்கத்துடனும் பக்தியுடனும் நாம் ஜெபிக்க வேண்டும். அவர்கள் போல் நம் அயலாரிடம் நாம் அன்பு, சாந்தம், பற்றுதலுடன் நடந்துகொள்ள வேண்டும். மரியாயைப்போல் தாழ்ச்சி, அடக்கவொடுக்கம், கற்புள்ளவர்க ளாய் நாம் வாழவேண்டும். நேரத்தை நன்கு பயன்படுத்தி, நமது செய்கைகள் அனைத்தையும் சிறந்த விதமாகச் செய்யவேண்டும்.

### தேவதாயின் மாதம்

**தேவதாயின் மாதம் இது அல்லவோ –**
**இதைச் சிறப்பாய்க் கொண்டாடிடவே**
**புறப்பட்டு வாரீர் தோழா – தேவ**


1. **பூவில் உள்ள மானிடர்க்கு தேவ சுதன் தந்த அன்னை**
   **புண்ணிய வரங்கள் எல்லாம் கொண்ட அன்னையே**
   **ஆவலுடன் நாம் எல்லோரும் தேவ மரி பதங்கூடி**
   **ஆனந்தம் மிகுந்த பல கீதங்களைப் பாடிடுவோம் – தேவ**

2. **தோட்டங்களிலுள்ள பல வாட்டமிலா புஷ்பங்களை**
   **சோடுசோடாய்ச் சேர்த்து நல்ல மாலை கட்டுவோம்**
   **கூட்டமாக எல்லோர் சேர்ந்து வீட்டிலுள்ள பேரைச் சேர்த்து**
   **கோவிலுக்கு சாயரட்சை ஆவலுடன் போவோம் வாரீர் – தேவ**

# சாத்தானின் சாட்சியம் ! (தொடர்ச்சி)

**உண்மை சம்பவம்**

**சங். மைக்கேல் முல்லர்** C.SS.R.



திவ்விய பலிபூசைக்குப் பிறகு, வழக்கம்போல் பேய் ஓட்டும் சடங்கு ஆரம்பமாகியது. மேற்றிராணியார் வந்தவுடனேயே சாத்தான் கேலியான குரலில், "ஹா! ஹா! எனது *Shell-pate!* இன்று அந்த தலைமைக் குருவிடம் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்தீர்தானே? நான் உம்மை பார்த்தேன். ஆனால் நீர் என்ன கூறினீர் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை" என்று ஆதங்கத்தோடு கூறியது.

அதைக் கேட்ட மேற்றிராணியார், "கடைசியாக நீ இப்போது வெளியேறத்தான் வேண்டும்" என்றார்.

அதற்கு,"ஆம்" என்று கூறிய சாத்தான்,"அது வாஸ்தவம் தான். நான் கண்டிப்பாக வெளியேறத்தான்வேண்டும். ஆனால் இன்றல்ல. இந்த பெண்ணை பீடித்துக்கொண்ட அந்த நேரத்திற்கு முன்பாக நான் போகப்போவதில்லை. பொறுமையாய் இரும். பகல் 3 மணி வரைக்கும் காத்திரும். ஆ! அந்த மணி நேரம் சபிக்கப்படட்டும். கடிகாரத்தின் முட்களை மாற்றி வைக்காதிரும். எனக்கு நேரம் எல்லாம் நன்றாகத் தெரியும். எனக்குரிய தீர்ப்பு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது" என்று கூறியது.

"சரி, நீ வெளியேறும்போது எந்த அடையாளத்தை தருவாய்?" என்று மேற்றிராணியார் கேட்க, அதற்கு சாத்தான் உடனே "அதைப்பற்றி கவலைப்படாதீர்" என்று கூறியபின் "போதுமான அடையாளங்களை நீர் பெறுவீர். இந்த சிருஷ்டியின் விளங்காமல் போன இடது கையை நான் குணமாக்குவேன். இந்த 3 மாதங்களாக அதனை அவளால் பயன்படுத்த முடியவில்லை. ஏனெனில் நான் அவளை ஆட்கொண்டிருக்கிறேன். நீ எனது *Shell-pate!* உமது அடையாளத்தைப் பெறுவீர். நீர் இதுவரையிலும் உணராத வகையில் உமது இருதயத்தை அச்சத்தால் தாக்குவேன். அதை நீர் அவ்வளவு சீக்கிரம் மறக்க முடியாததாக இருக்கும்" என்று ஆங்காரத்தோடும் சலிப்போடும் கூறியது.

அப்போது மேற்றிராணியார்,"சரி! நேற்று இரவு எங்கே இருந்தாய்?" என்று கேட்டார். அதற்கு "ஏன்? உமது வீட்டில் தான் இருந்தேன்" என்று பதிலளித்த சாத்தான் பின்னர் "உம்மை நன்றாகக் கவனித்தேன். கடந்த இரவு நீர் ஜெபிக்க எழுந்தீர். அது 3 மணியிருக்கும். என்னை வெளியேற்ற உமது ஜெபங்கள் அதிகமாக உதவி செய்யும் என்று நான் அறிவேன்" என்று கூறியது.

பேசிக்கொண்டிருந்த சாத்தானின் கவனம் அங்கே இருந்த லான் செலாட் என்ற கனவானின் மீது சென்றது. இடக்காக சிரித்த சாத்தான் அவரது சகோதரர் இராபர்ட் செய்த சில கனமான பாவங்களை பெயர் சொல்லி பகிரங்கமாக அறிவித்தது. "ஆம்" என்று வெறுப்போடு கூவிய சாத்தான், "திரு இரத்தத்தின் ஆணையாக நான் கூறியது உண்மை. அவன் உமது சகோதரனாக இருந்தாலும் நான் சொல்லியது உண்மை" என்று கூறியவன் அருகில் நின்றிருந்த ஒரு பெண்மணி பக்கம் திரும்பி "ஹே! மார்க்கரேட்! நேற்றிரவு உனது கணவன் லான் செலாட் 2 டாலர் பணத்தை இழந்து போனான் தெரியுமா? அதை வாங்கியவர் யார் தெரியுமா? நெல்லி!" என்று இடக்காகக் கூறி கொக்கரித்துச் சிரித்தது.

அதைக் கேட்ட லான் செலாட் என்ற அந்த கனவான் வெட்கத்தால் தலையை கவிழ்த்துக்கொண்டான். அங்கிருந்த அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். இப்படியே அங்கே இருந்தவர்களின் சில பாவங்களை வெளிப்படுத்தி அவர்களை வெட்கப்படுத்திக்கொண்டே இருந்தது.

இறுதியாக மேற்றிராணியார் திவ்விய நற்கருணையை கரத்தில் ஏந்தி "ஆசீர்வதிக்கப்பட்ட தமதிரித்துவத்தின் பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்துவின் பெயரால் இங்கே பிரசன்னமாயிருக்கும் சேசுவின் திரு சரீரத்தின் பெயரால் உனக்கு கட்டளையிடப்படுகிறது. கெட்ட அரூபியே, உடனே வெளியேறு. நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் வெளியேறு" என்று கூறினார்.

உடனே, "என்ன!" என்று கூறி உடலை குலுக்கிக் கொண்ட சாத்தான், "உமது வெண்மை..... யைக்கொண்டு என்னை வெளியேற்ற விரும்புகிறீரா?" என்று கேட்கவும்; உடனே இடைமறித்த மேற்றிராணியார், "சபிக்கப்பட்ட அரூபியே!" என்று கோபத்துடன், "சர்வேசுரனை இப்படி தேவதூஷணம் கூற யார் உனக்குக் கற்றுக்கொடுத்து? வாயை மூடு!" என்று அதட்டினார்.

"வேறு யார்? நான்தான் எனது கால்வீனியர்களுக்குக் கற்றுக்கொடுத்தேன். அவர்கள் எனது கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள்" என்றது சாத்தான். மேற்றிராணியார், "ஆனால் இங்கே பிரசன்னமாயிருப்பது உனது ஆண்டவரும், எஜமான ருமானவரின் திரு சரீரம். இது நமதாண்டவர் சேசு கிறீஸ்து வின் ஆசீர்வதிக்கப்பட்ட சரீரம். அவருடைய வல்லமையால் நீ வெளியேற்றப்படுவாய்" என்று அதட்டலாகக் கூறினார்.

"ஆம்! ஆமாம்! உண்மை!" என்று தலையை அசைத்த அந்த பேய், "அது உண்மையே. இது சர்வேசுரனின் சரீரம். நான் இதனை ஒப்புக்கொள்ளும்படியாகக் கட்டாயப்படுத்தப் படுகிறேன். ஹா! இப்படி ஒப்புக்கொள்வது என்னை எப்படி வதைக்கிறது தெரியுமா? ஆனால், நான் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். உண்மையை மட்டுமே பேசும்படி கட்டாயப்படுத்தப்படுகிறேன். உண்மை என்னிடமிருந்து வருவதில்லை. அது எனது ஆண்டவரும், எஜமானருமானவ ரிடம் இருந்து வருகிறது. சர்வேசுரனின் அனுமதியின் பேரிலேயேதான் இந்தப் பெண்ணின் உடலில் நுழைந்தேன்" என்று கூறியது.

இப்போது மேற்றிராணியார் பரிசுத்த திவ்விய நற்கருணையை அசுத்த அரூபியால் பீடிக்கப்பட்டவளின் முகத் தருகே கொண்டுசென்றார். உடனே சாத்தான் அஞ்சத்தக்க வகையில் வேதனைக் கூக்குரலிட்டது. நற்கருணையில் நமதாண்டவரின் பிரசன்னத்திலிருந்து தப்பித்துவிட முயன்றது. அப்போது பெரிய கரும்புகை நிக்கோலாவின் வாயிலிருந்து வெளியேற, அவள் அப்படியே கீழே விழுந்து விரைத்துப் போனாள். பின்னர் திவ்விய நற்கருணையால் மீண்டும் சுயநினைவை பெற்றாள்.

### பிப்ரவரி மாதம் 8-ம் நாள்:

அன்று பிற்பகலில் நடைபெற்ற பவனியின்போது சாத்தான் மேற்றிராணியாரிடம், "ஓ! மேற்றிராணியாரே! எனது *Shell-pate!* இன்று நீர் சாப்பிடவில்லைதானே? சாப்பிடா விட்டால் நோய் வந்துவிடும்; களைப்படைந்து போவீர்" என்று கூறியபின், "ஹா! அவர் எதுவும் உண்ணவில்லை! இந்த கேடு கெட்ட சிருஷ்டியின் உடலிலிருந்து என்னை வெளியேற்று வதற்கு முன்பாக நீர் உபவாசம் இருக்கிறீர். அப்படித்தானே? ஹா!" என்று கேலியாகப் பேசி பாடல் போன்று பாடினான்.

பவனி முடிந்து ஆலயம் வந்ததும் நிக்கோலா வழக்கம் போல் ஆலய நடுவில் உள்ள மேடையில் கிடத்தப்பட்டாள். திமிறும் அவளை 15 வலிமையான மனிதர்கள் பிடித்திருந்தனர். மேற்றிராணியாரும் குருவானவரும் லத்தீனில் ஜெபங்களைச் சொல்ல அதில் சாத்தானை "சபிக்கப்பட்ட அரூபி" என்று அழைக்கும்போதெல்லாம் சாத்தான் ஆங்காரமாக கோபா வேசத்துடன், "ஏய்! ஏன் சபிக்கப்பட்ட என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறீர்?!" என்று கத்தியது.

அதற்கு மேற்றிராணியார், "ஏனெனில், நீ ஒருபோதும் மன்னிப்பு பெற முடியாதபடி சர்வேசுரனை வேதனைப் படுத்திவிட்டாய். நீ நித்தியத்திற்கும் சிநேகத்தையும், நம்பிக்கையையும் இழந்துவிட்டாய். நீ நித்திய நரகத்தில் வாழ்வதற்கே உரியவன். உனக்கான தீர்ப்பு எப்போதோ விதிக்கப்பட்டுவிட்டது" என்று கூறினார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட சாத்தான் மௌன மாகியது. முகத்தைத் திருப்பிக்கொண்டது. இப்போது மேற்றிராணியார் பேயோட்டும் சடங்கின் ஜெபங்களை கம்பீரமாகச் சொல்லத் துவங்கினார். பேயோட்டத்தின் போது இடையிடையே சாத்தான், "ஏய்! மேற்றிராணியாரே இன்று நீர் சாப்பிடவில்லை! நீர் பலவீனமாய் இருக்கிறீர்! களைப் படைந்து போவீர்!" என்று கூறி இடையூறு செய்தது. பிறகு, சுற்றிலும் திரும்பி, "ஹா! ஹா! அட்டார்னி ஜெனரல் போசிசே நீர் இங்கேயா இருக்கிறீர்? இன்று காலையில் நீர் இங்கே இல்லையே!" என்று இடக்காகக் கூறியது.

இப்படி கூறியபின் மேற்றிராணியாருக்கு அருகில் ஏற்றிவைக்கப்பட்டிருந்த மந்திரித்த மெழுகுதிரியை ஊதி அணைத்தது. பின்னர் கேலியாக சிரித்துக்கொண்டு, "ஹா! ஹா! இந்தப் பட்டப்பகலிலா மெழுகுதிரியை எரிய விடுவார்கள்? சரியான முட்டாள் நீர்" என்று கேலியாகக் கூறியது.

இப்போது மேற்றிராணியார் சுவிசேஷத்தையும் ஜெபங்களையும் வாசித்து பேயோட்டும் சடங்கில் ஈடுபட்டார். "பெயேல் செபூப்" என்று பெயர் எழுதப்பட்ட தாளை எரித்து பாடுபட்ட அர்ச். சிலுவை மரத்தின் அருளிக்கத்தை நீட்டிக் காண்பித்து, வெகு கம்பீரமான தொனியில் அதனை வெளியேறும்படியாகக் கட்டளையிட்டார். ஆனால் அதற்கு எந்தவிதமான சலனத்தையும் காட்டவில்லை சாத்தான். ஆகையால் மேற்றிராணியார் மீண்டும், "நான் இன்னமும் இருக்கக்கூடாது என்று உன்னை கேட்கவில்லையா? வெளியேற உனக்கு எண்ணமில்லாத பட்சத்தில் சர்வேசுர னுடையவும் இங்கே பீடத்தில் தேவதிரவிய அநுமானத்தில் பிரசன்னமாயிருக்கும் அவரது நேச குமாரன் சேசு கிறீஸ்துவின் விலைமதிப்பில்லாத திரு இரத்தம், சரீரத்தின் வல்லமையால் உன்னை உடனே வெளியேற்றுவேன்" என்று கடுமையாகக் கூறினார்.

"ஹா, ஆம்!" என்று சிலிர்த்துக்கொண்ட சாத்தான் "இங்கே தேவ குமாரன் உண்மையிலும் உண்மையாக பிரசன்னமாயிருக்கிறார் என்பதை அறிக்கையிடுகிறேன். அவர் எனது ஆண்டவரும் எஜமானருமானவர். இதைச் சொல்வது எனக்கு கொடிய வேதனையைத் தருகிறதே. ஆனாலும் நான் அப்படிச் சொல்லும்படி கட்டாயப்படுத்தப்படுகிறேன்" என்று கத்தியது, பதறியது. இதனையே மீண்டும் மீண்டும் பல தடவைகளில் பயங்கரமான உலகத்தில் கேட்க முடியாத கொடூரமான குரலில் கூறியது. மீண்டும் ஊளையிட்டு, "ஆம். இது உண்மை, சத்தியம்! நான் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இங்கே பிரசன்னமாயிருக்கும் சர்வேசுரனின்

சரீரத்தின் வல்லமையால் நான் வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப் படுகிறேன். இந்த சத்தியத்தை வெளியிடவேண்டும் என்பதைப்பற்றியும், விரைவில் வெளியேறுவேன் என்ற யதார்த்தமும் என்னை கொடூரமாய் வதைக்கிறது. ஆனால் இந்த உண்மை என்னிடமிருந்தல்ல, இங்கே என்னை அனுப்பினவரும், சத்தியங்களை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள அறிக்கையிட என்னைக் கட்டாயப்படுத்தியும் கட்டளை யிடுபவருமான எனது ஆண்டவரும், எஜமானருமானவரிட மிருந்தே வருகிறது. நான் போய்விடுவேன். ஆனால் வெறும் கையனாகப் போகமாட்டேன். கொள்ளையடிக்கப்பட்ட என் பொருட்களை கொண்டு செல்வேன். நான் செல்லும்போது இந்த விர்வின்ஸ்கின் (அவ்வூரில் புகழ்பெற்ற பதிதன்) தலையை கொய்துகொண்டு செல்வேன். ஒருவேளை எனது கால்வீனியர்களில் சிலர் உடல், ஆன்மா எனக்குச் சொந்த மாதலால் அவர்களையும் என்னுடன் கொண்டு செல்வேன். ஹா! உமது தலையைத் தாரும்!" என்று ஆக்ரோஷமாய் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தவாறு மேற்றிராணியாரை நோக்கி திரும்பியது. "ஏய்! என்னால் தூக்கிச் செல்ல முடியுமா முடியாதா என்பதை பார்ப்போமா?" என்று கோப வெறியோடு கூப்பாடு போட்டது.

உடனே மேற்றிராணியார் "இல்லை, முடியாது!" என்று இடைமறித்தவர், "நீ வெளியேறும்போது எதையும் எடுத்துச்செல்லக் கூடாது. இந்த மனிதர்கள் ஞானஸ்நானம் பெற்றவர்கள். அவர்களை நீ தொடக்கூட முடியாது" என்று குரலை உயர்த்திக் கூறினார்.

உடனே, "ஆமாம்!" என்று கத்திய சாத்தான் திடீரென்று குரலை கேலியாக மாற்றி, "அவர்கள் ஞானஸ்நானம் பெற்றவர்கள். ஆனால் அதில் என்னை மறுதலிப்பதாகக் கூறிய பின்னர் தங்களையே எனக்கு மீண்டும் தந்து விட்டவர்கள். ஆகையால் அவர்கள் என்னுடையவர்கள். உண்மையாகவே அவர்கள் என்னுடையவர்கள்" என்று கூறி உரிமைப் பாராட்டியது.

"வாழும் சர்வேசுரனின் நாமத்தில் நான் உனக்கு தடை விதிக்கிறேன்" என்று ஆணையிட்ட மேற்றிராணியார், "இங்கே இருப்பவர்கள் யாருக்கும் - எவருக்கும் நீ தீங்கு செய்வதை நான் தடைசெய்கிறேன்!" என்று அதிகாரத்தோடு கூறினார்.

பின்னர் மேற்றிராணியார் திவ்விய நற்கருணையை தன் கரங்களில் எடுத்துக்கொண்டு உயரே தூக்கிப் பிடித்து கொண்டார். பின் கம்பீரமான குரலில், "ஓ! கெட்ட அசுத்த அரூபியே! பெயேல்செபூப்! நீ நித்திய கடவுளின் பிரதான எதிரி! இதோ உனது ஆண்டவரும் எஜமானருமான நமதாண்டவர் சேசு கிறீஸ்துவின் விலைமதிப்பில்லா சரீரமும் இரத்தமும் இங்கே பிரசன்னமாகியுள்ளது... நான் இங்கே பிரசன்னமாயிருக்கும் மெய்யான தேவனும், மெய்யான மனிதருமான நமதாண்டவரும் மீட்பருமான சேசு கிறீஸ்துவின் வல்லமையாலும் அவரது நாமத்தினாலும் நான் உனக்கு ஆணையிடுகிறேன். சர்வேசுரனின் இந்த சிருஷ்டியைவிட்டு நிரந்தரமாக உடனே வெளியேறும்படியாக நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். உடனே நித்திய தண்டனையை அனுபவிக்கும்படியாக நரகத்தின் ஆழமான பாதாளத்துக்குச் செல். போ அசுத்த அரூபியே. இங்கே இதோ உனது ஆண்டவரும், எஜமானருமானவர் இருக்கிறார். உடனே போ!" என்று கடுமையானக் குரலில் கூறினார்.

இந்த கம்பீரமான அதிகாரத் தோரணையிலான வார்த்தைகளாலும், நமது நற்கருணை ஆண்டவரின் பார்வையிலும் பேய் பிடித்த அந்த பாவப்பட்ட பெண் பயங்கரமாகத் திமிரலானாள். அவளது ஒவ்வொரு எலும்பும் உடைந்துவிடுவது போல் உடல் முறுக்கப்பட்டது. 15 வலிமை யான மனிதர்கள் அவளைப் பிடித்து மீண்டும் படுக்கையின்மீது வைப்பதற்குப் பெரும்பாடு படவேண்டியிருந்தது. அங்கும் இங்குமாக அவர்கள் உலுக்கப்பட்டார்கள். வியர்வை அருவியாக வடிய கெட்டியாக அவளைப் பிடித்தார்கள். இப்போது நிக்கோலாவின் வாய் திறக்கப்பட்டு அவளது நாக்கு வெளியே வந்து அவளது கன்னம் வரையிலும் நீண்டு தொங்கியது. முகம் வீங்கி அகோரமாய் காணப்பட்டது. அவளது உடல் மஞ்சள் நிறத்திலிருந்து பச்சை நிறத்திற்கும், இளம் சிவப்பு நிறத்திற்குமாக மாறி மாறித் தோற்றமளித்தது. அவள் ஒரு மனிதப்பிறவி போலல்லாமல், ஒரு மிருகமாகவே காணப்பட்டாள். இதைக் கண்ட சுற்றிலும் நின்றவர்கள் அச்சத்தால் நடுநடுங்கிப் போனார்கள். சாத்தான் போட்ட காட்டுக் கூச்சலைக் கேட்டதும் பயந்துபோனார்கள். ஒரு அடங்காத காட்டு எருமையின் கோப வெறிகொண்ட உருவமாக இருந்த சாத்தானின் கூச்சலைக் கேட்டு எல்லோரும் நடுங்கினார்கள்.

உடனே அனைவரும் முழந்தாளிட்டு கண்ணீர் பெருக. சேசுவே, எங்கள்மீது இரக்கமாயிரும்! என்று பதறி மன்றாட லானார்கள். அதே சமயம் மேற்றிராணியார் சாத்தானை வெளியேறும்படி துரிதப்படுத்தினார். இறுதியாக அந்த கொடிய அசுத்த அரூபி வெளியேறியது. அப்போது நிக்கோலா அவளைப் பிடித்திருந்தவர்களின் கரங்களில் உணர்வற்று அப்படியே பின்னிட்டு விழுந்தாள். அவளது உடல் இன்னமும் துடிதுடித்துக்கொண்டிருந்தது. அவளது உடல் ஒரு பந்து போல் உருண்டது. இப்போது மேற்றிராணியார் முழந்தாளிட்டு அவளுக்கு வழக்கம்போல் திவ்விய நற்கருணையை வழங்க முற்பட்டார். ஆனால் அந்தோ! திடீரென்று சாத்தான் திரும்பி வந்தது. கடுமையான கோப வெறியோடு திரும்பிய சாத்தான் திவ்விய நற்கருணையை ஏந்தியிருந்த மேற்றிராணியாரின் கையைப் பற்றி நற்கருணையைப் பறிக்க முயன்றது. இதனால் மேற்றிராணியார் பின்னோக்கி நகர, நிக்கோலா இப்போது அப்படியே அந்தரத்தில் மிதக்கலானாள். இந்த பயங்கரமான காட்சியைக் கண்ட மேற்றிராணியார் உடல் நடுங்க நற்கருணையைக் காப்பாற்ற மெல்ல எழ முயன்றார். அவர் மீண்டும் தமது திடத்தை வரவழைத்துக்கொண்டவராக, சாத்தானோடு போராடினார். நிக்கோலாவை பிடித்திருந்த வர்கள் அவளது திமிறலால் சிதறி விழுந்தார்கள்.

அங்கே கூடியிருந்தவர்கள் அந்த பயங்கரக் காட்சியை கண்டு நடுநடுங்கி சர்வேசுரனின் உதவியைக் கேட்டு உருக்கமாக மன்றாடினர். இப்போது சாத்தான் மேற்றிராணி யாரின் கரத்தை விடுவித்து இடி இடிக்கும் ஓசையை எழுப்பியவாறு வெளியேறியது. திடீரென மீண்டும் கோப

வெறியோடு வந்த அது அங்கு நின்றிருந்த சில கால்வீனியப் பதிதர்களை ஆங்காரத்தோடு பார்த்தது. அவர்கள் தங்கள் தலையை மூடியிருந்தார்கள்.

உடனே மக்கள் அவர்களைப் பார்த்து, "முழந்தாளிடுங்கள். உங்கள் தலையை மூடாதீர்கள். முழந்தாளிட்டு நமதாண்டவர் சேசு கிறீஸ்துவின் விலைமதிப்பில்லாத திரு சரீரத்தினுடையவும் இரத்தத்தினுடையவும் சமுகத்தில் மண்டியிடுங்கள். தலையை மூடாதீர்கள்" என்று கூறினார்கள்.

இந்த வார்த்தைகளைக் கூறி முடித்ததும்தான் தாமதம் "ஆயுதத்தை எடு! ஆயுதத்தை எடு!!" என்ற காட்டுக் கத்தல் கேட்டது. அங்கே ஒரு கணம் குழப்பம் நிலவியது.

அங்கேயிருந்த கத்தோலிக்க மக்கள் கால்வீனிச பதிதர்கள்தான் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தங்களைக் கொல்ல ஆலயத்திற்குள் வந்துவிட்டார்களோ என்று நினைத்தார்கள். ஆனால் கால்வீனியர்களோ மரண பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். இத்தகைய அச்சமும், குழப்பமும் ஒரு விதத்தில் அந்த நகரம் முழுவதிலும் பரவியது. நகர மக்கள் ஒவ்வொருவரும் இனந்தெரியாத அச்ச உணர்வு கொண்டனர். இந்த திடீர் நிகழ்விற்குரிய உண்மையான காரணங்களை அறிய முடியாது நகர மக்கள் திகைத்தனர்.

ஆலயத்தில் மேற்றிராணியார் அமைதியாக தன் இடத்தில் நின்றார். கையில் திவ்விய நற்கருணையை இன்னமும் ஏந்தியிருந்த அவர் அங்கே கூடியிருந்த மக்களிடம் உரத்தக் குரலில் "எனது நண்பர்களே, பயப்படாதீர்கள். நீங்கள் இருக்கும் இடத்திலேயே இருங்கள். இங்கே நமதாண்டவரின் மெய்யான திரு சரீரம் உள்ளது. அவர் நமக்கு உதவி செய்வார்; முழந்தாளிட்டு அவரை ஆராதித்து ஜெபியுங்கள். யாரையும் தாக்கவேண்டாம் என்று சர்வேசுரனின் திருநாமத்தில் உங்களை தயவாய் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறினார்.

அவர் அவ்வாறு கூறியதும், உடனே அங்கு அமைதி நிலவியது. அனைவரும் முழந்தாளிட்டு பேய் பிடித்த பெண்ணிற்காக ஜெபிக்கலானார்கள். மேற்றிராணியார் இப்போதும் கரத்தில் நற்கருணையை ஏந்தியவாறு சாத்தானை எச்சரித்துக்கொண்டிருந்தார். நமதாண்டவரின் திரு சரீரத்தின் வல்லமையால் அது மேற்கொள்ளப்படும் வரையிலும், வெளியேறும்படி உத்தரவிட்டுக்கொண்டே இருந்தார். இறுதியாக சாத்தான் இடி மின்னலை ஏற்படுத்தி புகை மூட்டத்தினூடே வெளியேறியது.

ஒரு வழியாக சாத்தான் அகற்றப்பட்டது! அன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியாக இருந்தது! நமதாண்டவர் தமது ஆசீர்வதிக்கப்பட்ட மரணத்தின் மூலம் நரகத்தை வெற்றிக்கொண்ட அதே நாள். அதே மணிநேரத்தில் அது வெளியேற்றப்பட்டது.

இப்போது நிக்கோலா முழுவதும் குணமாக்கப்பட்டிருந்தாள். முழந்தாளிட்டு சர்வேசுரனுக்கும், அந்த நல்ல மேற்றிராணியாருக்கும் நன்றி கூறினாள். அங்கே கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சியினால் விம்மி அழத் துவங்கியவர்கள் சர்வேசுரனுக்கும், திவ்விய நற்கருணையில் நமதாண்டவருக்கும் நன்றிக் கீதம் பாடத் துவங்கினார்கள்.

"ஆ! எத்தகைய ஒரு புதுமை! ஆ! நான் என் கண்ணாலேக் கண்டேன். சர்வேசுரா உமக்கு நன்றி! பீடத்தின் தேவதிரவிய அநுமானத்தில் நமதாண்டவர் சேசு கிறீஸ்துவின் உண்மை பிரசன்னத்தின் மீது இப்போது யார்தான் சந்தேகம் கொள்ள முடியும்?" என்ற ஆச்சரியக் குரல்கள் எங்கும் கேட்டன.

அங்கேயிருந்த அநேக புரொட்டஸ்டாண்டார் "திவ்விய நற்கருணையில் ஆண்டவரின் பிரசன்னத்தை இப்போது விசுவசிக்கிறோம். எங்கள் கண்ணால் கண்டு கொண்டோம். இனியும் ஒரு கால்வீனிஸனாக இருக்க மாட்டேன். இந்தத் தப்பறையில் இதுவரையில் நான் இருக்கக் காரணமானவர்கள் சபிக்கப்படுவார்கள். ஆ! இப்போது திவ்விய நற்கருணையின் உந்நதத்தைப் புரிந்துகொண்டோம்" என்று கூறினார்கள். அங்கேயிருந்த அனைத்து பதிதர்களும் மனந்திரும்பினார்கள்.

அங்கே நன்றி கீதம் *(Te Deum)* பாட்டாக இசைக் கருவிகளால் இசைக்க, ஆலய மணிகள் மகிமையாக அடிக்கத் துவங்கின. எங்கும் மகிழ்ச்சி நிலவியது.

**– முற்றும் –**

## நகர்ந்து சென்ற சிலுவை !

**அர்ச். 5-ம் பத்திநாதர் பாப்பரசர் திருச்சபையில் தப்பறைகள் நுழைந்துவிடாதபடி பல கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வந்தார். இதனால் கோபமுற்ற வேத விரோதிகள் அவரைக் கொல்ல சதிசெய்தார்கள். அதன்படி அவர் எப்போதும் பக்தியோடு முத்திசெய்யும் பாடுபட்ட சிலுவையின்மீது விஷத்தைத் தடவி வைத்தனர். வழக்கம்போல் அவர் அதனை அன்போடு அரவணைத்து முத்திசெய்யும் போது புதுமையாக அந்தச் சிலுவை அவரது உதடுகள் படாதபடி நகர்ந்து சென்றது. இதனால் பாப்பரசர் மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்.**

# அருட்கருவிகள் - ஓர் விளக்கம்

## Sacramentals - An explanation

***1. நம்மை அர்ச்சிப்பதற்கு தேவதிரவிய அனுமானங்களைத் தவிர வேறே வெளி வழிவகைகள் உண்டா?***

திருச்சபை உபயோகிக்கும் அருட்கருவிகள் உண்டு.

***2. அருட்கருவிகள் என்பதற்கு அர்த்தமென்ன?***

தேவதிரவிய அனுமானங்களின் பாவனையாக, திருச்சபை தனது மன்றாட்டினால் நமக்கு வேண்டிய சில நன்மை சகாயங்களை, விசேஷமாய் ஞான நன்மைகளை, அடைந்து கொடுக்கும்படி உபயோகிக்கும் பொருட்கள் அல்லது கிருத்தியங்களே (செயல்கள்) அருட்கருவிகள் எனப்படும்.

***3. இவ்விடம் கிருத்தியங்கள் அல்லது செயல்கள் என்றால் என்ன?***

அருட்கருவியின் தன்மையான விஷயம் தற்காலமாயிருந்து, அதற்குப்பின் நிலையற்றதாயிருந்தால் கிருத்தியம் அல்லது செயல்கள் எனப்படும். உதாரணமாக: மந்திரித்தல்.

***4. இவ்விடம் பொருட்கள் என்றால் என்ன?***

அருட்கருவியின் தன்மையான விஷயம் நிலையுள்ளதாயிருந்தால், அது பொருள் எனப்படும். உதாரணமாக: தீர்த்தம், மந்திரிக்கப்பட்ட சுரூபங்கள் முதலியவைகள்.

***5. அருட்கருவிகள் எப்படித் தேவதிரவிய அனுமானங்களின் பாவனையாயிருக்கின்றன?***

அருட்கருவிகளும் தேவதிரவிய அனுமானங்களைப் போல், தம் வழியாய் அடையக்கூடுமான இலௌகீக நன்மைகளையோ அல்லது ஞான நன்மைகளையோ குறித்துக்காட்டும் வெளியரங்கமான அடையாளங்களாயிருக்கின்றன.

***6. தேவதிரவிய அனுமானங்களுக்கும் அருட்கருவிகளுக்குமுள்ள வித்தியாசம் என்ன?***

*(1)* தேவதிரவிய அனுமானங்களெல்லாம் சேசு கிறீஸ்துநாதரால் உண்டாக்கப்பட்டன. அருட்கருவிகளோ திருச்சபையால் ஏற்படுத்தப்பட்டன. மேலும் திருச்சபை புதுத் தேவதிரவிய அனுமானங்களை ஏற்படுத்தக்கூடாது. ஆனால் புது அருட்கருவிகளை உண்டாக்கலாம்.

***7. அருட்கருவிகள் எத்தனை வகைப்படும்?***

அவைகளை ஆறு பிரிவாய்ப் பிரிக்கலாம்.

*(1)* செபங்கள் அதாவது திருச்சபையால் கற்பிக்கப்பட்டு அதன் பெயரால் சொல்லப்படும் செபங்கள். உதாரணமாக: ஞானஸ்நானம், அவஸ்தைப்பூசுதல் கொடுக்கப்படும்போது சொல்லப்படும் கர்த்தர் கற்பித்த செபம், பூசைச் செபம், திருச்சபையின் கட்டளைப்படி குருக்கள் செபிக்கும் சங்கீதமாலை முதலியவைகள். ஒவ்வொருவரும் தனித்தனியே செபிக்கும் செபம் அருட்கருவியல்ல.

*(2)* தீர்த்தத் தெளித்தலும், திருப்பூசுதலும்.

*(3)* மந்திரிக்கப்பட்ட பதார்த்தங்களைப் புசித்தல்

*(4)* பூசையின் துவக்கத்திலும், திவ்விய நன்மை கொடுக்கும்போதும், கட்டளை செபம் செபிக்கும்போதும் சொல்லப்படுகிற பாவசங்கீர்த்தன மந்திரம்.

*(5)* திருச்சபை கற்பிக்கிற தானதர்மங்களும், ஆத்தும சரீர சம்பந்தமான சகல தர்மக்கிரியைகளும். உதாரணமாக: விசுவாசப்பரம்புதல், பாலர் சபை, அர்ச். இராயப்பர் காசு முதலியவைகளுக்குச் செய்யும் தர்மம், ஞானோபதேசம் கற்றுக் கொடுத்தல், வியாதிக்காரரைச் சந்தித்தல் முதலியவைகள். மற்றப்படி ஒவ்வொருவரும் தன் இஷ்டப்படி செய்யும் தானதர்மம் அருட்கருவியல்ல.

*(6)* திருச்சபையால் ஏற்படுத்தப்பட்டு ஜனங்கள் பேரிலாவது, யாதொரு பொருள் பேரிலாவது, அர்ச். பாப்பாண்டவர், மேற்றிராணிமார்கள், குருக்கள் கொடுக்கிற சகலவித ஆசீர்வாதங்களும், அவ்விதமாய் மந்திரிக்கப்பட்ட பொருட்களும்.

***8. அருட்கருவிகளால் விசேஷமாய் விளையும் நன்மைகள் எவை?***

பலவித நன்மைகளை, விசேஷமாய் ஞான நன்மைகளை வருவிக்க அருட்கருவிகளுக்குச் சக்தியிருக்கின்றது.

*(1)* நம்மிடத்தில் ஸ்திரமான பக்திப் பற்றுதலை எழுப்பி, நாம் பாவத்தை விலக்கிப் புண்ணியத்தைச் செய்யும்படி வேண்டிய

உதவிவரப்பிரசாதத்தைப் பெறுவிக்கிறதுமின்றி, பாவப்பொறுத்தலை அடைய நம்மை ஆயத்தப்படுத்துகின்றன.

(2) மனப்பற்றுதலற்ற சகல அற்பப்பாவங்களும் மன்னிக்கப்படும்.

(3) பசாசானது இருக்கக்கூடிய இடங்களிலும், ஆட்களிலும், பொருட்களிலும் நின்று அதைத் துரத்துகின்றன.

(4) அநேக பிரபஞ்சத் தீமைகளினின்று இரட்சிக்கின்றன. இப்படியே வியாதி, தொத்துநோய், இடி, பஞ்சம் முதலிய துன்ப துரிதங்களிலும், ஆபத்து விபத்துக்களிலும் நின்று காப்பாற்றுகின்றன. மேலும் பற்பல இலௌகீக நன்மைகளையும் அளிக்கின்றன. உதாரணமாக: மழை, சௌக்கியம், வெள்ளாண்மை.

(5) மன்னிக்கப்பட்ட பாவங்களுக்கு இன்னும் வரவேண்டிய அநித்திய ஆக்கினையும் நீங்கிப்போகலாமென்பது சில சிறந்த வேதசாஸ்திரிகளின் அபிப்பிராயம்.

**9. அருட்கருவிகளுக்குரிய நன்மைகளைப் பெறுவதற்கு வேண்டிய ஆயத்தம் என்ன?**

விசுவாசம், பக்தி, பாவங்களின்மேல் மனஸ்தாபம் முதலிய பற்றுதல்கள் அவசியம். மெய்யான மனஸ்தாபம் இல்லாமல் யாதொரு அற்பப்பாவமும் மன்னிக்கப்படாது. அருட்கருவிகளைப் பெறுபவர்களின் ஆயத்தத்துக்குத் தகுந்தபடி அதிகமான பலனைப் பயக்குவதினால், அவைகளால் வரும் நன்மைகளை ஏராளமாய் அடையும்படி நல்ல ஆயத்தமாயிருக்க வேண்டியது.

# சிலுவையும் பாடுபட்ட சுரூபமும்

நமது திவ்விய இரட்சர் சிலுவை மரத்தில் அறையுண்ட பாவனையாய்ச் செய்த சுரூபம் பாடுபட்ட சுரூபம் எனப்படுகின்றது; சுரூபம் இல்லாத வெறுஞ் சிலுவைக்குச் சிலுவை என்று பெயர். கிறீஸ்துவ ஆராதனை ஸ்தலங்கள், பள்ளிக்கூடங்கள், தர்ம ஸ்தாபனங்கள் முதலிய வைகளை இதர மத ஸ்தாபனங்களினின்று பிரித்துக்காட்டுகிற வெளி அடையாளம் சிலுவையே.

பூர்வீக காலங்களில், பெரும் குற்றவாளிகளைச் சிலுவையில் அறைந்து கொல்வது அநேக நாடுகளில் வழக்கமாயிருந்தது. அதிக பழமையான வழக்கம் குற்றவாளியை ஓர் மரத்தில் ஆணிகளால் அல்லது கயிறுகளால் தொங்க விட்டு தூக்குப் போடுவதுதான். பின்னர் இரு மரத்துண்டுகளை உபயோகிக்கிற வழக்கம் ஏற்பட்டது. உரோமையர் அடிமைகளை யும் சிலுவையில் அறைந்து கொல்வார்கள். இத்தகைய மரணத் தீர்ப்புபெற்றவர்களின் கைகளைச் சிலுவையின் குறுக்குச் சட்டத்தில் விரித்து வைத்துக் கைகளையும் பாதங்களையும் இருப்பாணிகளால் சிலுவையோடு சேர்த்து அறைந்து தொங்கவிடுவார்கள். இது மிகவும் குரூரமான தண்டனை என்று சொல்லத் தேவையில்லை. நமது திவ்விய இரட்சகர் இப்போது சொன்ன குரூர மான விதமாய் அறையுண்டு மரித்தார்.



சிலுவையானது அக்காலங்களில் குரூர வாதனை செய்யும் ஆயுதமாக உபயோகிக்கப்பட்டாலும், அஞ்ஞானிகள் அதற்குச் சங்கை செலுத்திவந்தது குறிப்பிடத்தக்கது. அது சூரிய சுழற்சிக்கு அடையாள மாகவும் உயிருக்கு அறிகுறியாகவும் பாவிக்கப்பட்டு வந்தது. எஜிப்து தேசத்திலும் அசீரியா நாட்டிலும் சிலுவை உற்பத்தி, சக்திக்கு உருவமாக எண்ணப்பட்டது. பௌத்த மதத்தினர் அதை மறு ஜீவியத்துக்கு அடையாளமாகக் கருதினதாகவும் சொல்கிறார்கள். ஆனால் நமது சிலுவைக்கும் அவர்கள் உபயோகித்த சிலுவைக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்பது உண்மை. ஆயினும் அந்த அஞ்ஞானிகள் அதே அடையாளத்தை இலௌகீக சீவியத்தின் குறியாகக் கொண்டிருந்தார்கள் என்பது ஒரு விசேஷந்தான். கிறீஸ்தவ வேதம் உரோமை இராச்சியம் முழுவதிலும் பரவத் துவக்கினதிலிருந்து, சிலுவையை விசுவாச சின்னமாகவும், பக்திக்குரிய பொருளாகவும், பகிரங்கமாய் எங்கும் உபயோகிக்கலானார்கள். திருச்சபை சிலுவையையும் பாடுபட்ட சுரூபத்தையும் மந்திரிப்பதற்கு விசேஷ ஜெபங்களை ஏற்படுத்தி, அவைகள் இரண்டையும் விசுவாசப் பற்றுதலோடு பிரயோகிக்கும்படி விசுவாசிகளைத் தூண்டினது.

**மெய்யான சிலுவை :**

நமது திவ்விய இரட்சகர் பாடுபட்ட சிலுவை இப்போது எங்கே இருக்கிறது? கொன்ஸ்தாந்தீன் மகா சக்கரவர்த்தியின் தாயாகிய ஹெலனம்மாள் 326-ம் ஆண்டில், எருசலேமுக்குத் திருயாத்திரையாகச் சென்றபொழுது, கல்வாரிமலையில் பல குழிகளைத் தோண்டிப் பரிசோதித்ததின் பயனாக மூன்று சிலுவைகள் அகப்பட்டன. அவைகளில் எது நமது திவ்விய இரட்சகருடைய என்று தெரிந்துகொள்ள இயலாததால் எருசலேம் நகர் மேற்றிராணியாராகிய மக்காரியுஸ் ஆண்டவர் சொன்ன யுக்திக்கிணங்கி, அந்தச் சிலுவைகள் ஒவ்வொன்றையும் வியாதியாயிருந்த ஓர் ஸ்திரீயின்மேல் வைக்க, அவைகளில் ஒன்று அவளைத் தொட்டவுடன் அவள் திடீரெனப் புதுமையாய் சொஸ்தமடைந்ததினால், அச்சிலுவையே நமது திவ்விய இரட்சகர் பாடுபட்ட சிலுவை


என்று தெரிந்துகொண்டார்கள். அந்த சிலுவையின் குறுக்குச் சட்டத்தை எருசலேமில் வைத்துவிட்டு, நீண்ட பாகத்தைக் கொன்ஸ்தாந்திநோபிளுக்கு *(Constantinople)* அனுப்பினார்கள். இதில் பெரிதான பாகம் சிறிது காலத்துக்குப் பிறகு உரோமைக்கு அனுப்பப்பட்டு பரிசுத்த சிலுவைக் கோவிலில் ஸ்தாபிக்கப்பட்டது. கொன்ஸ்தாந்திநோபிளில் இருந்த பாகத்தை 13-ம் நூற்றாண்டில் பிராஞ்சிய அரசராயிருந்த அர்ச். லூயிஸ் பாரீஸ் பட்டணத்துக்குக் கொண்டுபோனதாகச் சொல்கிறார்கள். எருசலேமில் இருந்த பாகத்தை பெர்சியா தேசத்தார் அபகரித்துக் கொண்டுபோக, 628-ம் வருடத்தில் எராக்கிளியுஸ் *(Heraclius)* சக்கரவர்த்தி அதை மீட்டுக்கொண்டு வந்தார். ஆனால் முகமதியர் எருசலேமைத் தங்கள் வசமாக்கின பின், அது எங்கே போயிற்றென்று அறிய வழியில்லை.

### ஆணிகள் :

நமது திவ்விய இரட்சகரை அறைந்த ஆணிகள் மூன்றாஅல்லது நான்கா என்பதைப் பற்றி இன்னும் அபிப்பிராய பேதம் இருந்துவருகிறது. சில படங்களில், பாதங்களை அறைந்த ஆணி ஒன்றாகவும், வேறு சில படங்களில் இரண்டாகவும் காட்டியிருக்கிறது. பாதத்தைத் தாங்கும் பலகையொன்று சித்தரிக்கப் பட்ட படங்களில் பாதங்களை ஒன்றித்து ஒரே ஆணியால் அறைந்ததாகக் காட்டியிருப்பதைப் பார்க்கலாம். இந்த ஆணிகளைக் குறித்து அநேகர் பல சங்கதிகள் சொல்லிக்கொள்கிறார்கள். இவைகளையெல்லாம் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய கடமை இல்லை. அவைகள் விசுவாச சத்தியங்கள் அல்ல. ஆயினும், பற்பல இடங்களில் மெய்யான சிலுவையின் துண்டுகள் இருக்கின்றனவென்று சொல்வதை நம்ப இடமுண்டு.

### பாடுபட்ட சுரூபம் :

திவ்விய பூசை செய்யும் பீடத்தில் பாடுபட்ட சுரூபம் இருக்கவேண்டும் என்பது திருச்சபையின் கட்டளை. கல்வாரி மலையில் நடந்த பலியைத் தொடர்ந்து நடத்தும் பலியே திவ்விய பூசையாகையால், இந்தக் கட்டளையின் கருத்து வெளிப்படையாயிருக்கிறது. சுற்றுப்பிரகாரங்களின் முன்னணியில் வழக்கமாய் கொண்டுபோகப்படுவது பாடுபட்ட சுரூபமே. கத்தோலிக்க இல்லங்களில் இதைப் பகிரங்கமான இடத்தில் வைத்துச் சங்கிக்கவேண்டும் என்பது திருச்சபையின் விருப்பம். பாடுபட்ட சுரூபத்தின் தலைப்பில் I.N.R.I. என்னும் நான்கு எழுத்துக்கள் வரைந்திருப்பது வழக்கம். "சேசு நசரேன்



யூதர்களின் இராஜா" என்ற அர்த்தம் கொண்ட Iesus Nazarenus Rex Iudaeorum என்னும் இலத்தீன் வார்த்தைகளின் முதல் எழுத்துக்கள் இவை. பிலாத்து இட்டக் கட்டளைப்படி நமதாண்டவரை அறைந்த சிலுவையின் மேல் பகுதியில் இந்த வார்த்தைகள் செதுக்கப்பட்ட பலகை மாட்டியிருந்ததே இதற்குக் காரணம். சிலுவையின் அடிப்பாகத்தில் ஒரு மண்டையோடும் எழும்புகளும் காட்டியிருப்பதும் உண்டு. கல்வாரிமலை எபிரேய மொழியில் கொல்கொத்தா *(Golgotha)* என்பார்கள். இதற்கு அர்த்தம் "மண்டையோட்டின் ஸ்தலம்". ஆதி மனிதனாகிய ஆதாம் இவ்விடத்தில் புதைக்கப்பட்டாரென்று அவர் நிமித்தம் உண்டான பாவதோஷத்தை நீக்க வந்த சேசுநாதர் அதே இடத்தில் மரித்தார் என்றும் எடுத்துக் காட்டுவதற்காக, சிலுவையின் அடியில் ஆதாமின் மண்டையோடு காட்டடப்பட்டிருக்கிறதென்று சிலர் சொல்வார்கள்.


நன்றி: ஞானோபதேசக் கோர்வை : 3-ம் பாகம், பக். 281 - 284.

கத்தோலிக்க களஞ்சியம் : இரண்டாம் பதிப்பு, திருச்சி. 1941.

## பரிபூரண பலனுள்ள ஜெபம்

**மகா மதுரம் பொருந்திய நல்ல சேசுவே! அடியேன் தேவரீருடைய திருச் சமுகத்தில் முழந்தாளிலிருந்து சாஷ்டாங்கமாக விழுந்து என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள். என் எலும்புகளையெல்லாம் எண்ணினார்கள் என்று தேவரீரைப்பற்றி முன்னர் தாவீதென்கிற தீர்க்கதரிசி உமது வாயின் வாக்கியமாக வசனித்ததை என் கண் முன்பாகக் கண்டு தேவரீருடைய ஐந்து திருக்காயங்களையும் மிகுந்த மன உருக்கத்தோடும் துக்கத்தோடும் என் உள்ளத்தில் விசாரித்து நினைவில் தியானிக்கிற இந்நேரத்தில் திடனான விசுவாசம், நம்பிக்கை, தேவ சிநேகமென்கிற சுகிர்த கருத்துகளையும் என் அக்கிரமங்களின்மேல் மெய்யான மனஸ்தாபத்தையும் அவைகளை திருத்த மெத்த உறுதியான பிரதிக்கினையையும் என் இருதயத்தில் பதியச் செய்தருள வேண்டுமென்று என் நல்ல சேசுவே தேவரீரை என் ஆத்துமத்தின் மேலான ஆசை ஆவலோடு இரந்து மன்றாடிப் பிரார்த்திக்கிறேன். ஆமென்.**

# உரோமையின் முக்கிய பேராலயங்கள் - II



பேராலயத்தின் உட்புறத்தோற்றம்

## அர்ச். சின்னப்பர் பேராலயம்

உரோமையிலுள்ள 4 பெரிய பேராலயங்களில் ஒன்றான அர்ச். சின்னப்பர் பேராலயம், 4-ம் நூற்றாண்டில் அர்ச். சின்னப்பரின் கல்லறையின் மேல் பேரரசர் கான்ஸ்டான்டினால் கட்டப்பட்டது. 1823, ஜுலை மாதம் இப்பேராலயம் பெரியதொரு தீ விபத்தால் சேதமடைந்ததால், மறுபடியும் அது முன்பு இருந்தது போலவே கட்டப்பட்டு, 1854, டிசம்பர் 10-ம் நாள் மீண்டும் அபிஷேகம் செய்யப்பட்டது.



பீடத்தின்மேல் அமைந்துள்ள அழகிய பால்டக்கீனோ (கூரை)



திருச்சபையை ஆண்ட அனைத்து பாப்பரசர்களின் சித்திரங்கள்



பீடத்தின் கீழே இருக்கும் அர்ச். சின்னப்பரின் கல்லறை



பேராலயத்தை பராமரிக்கும் அர்ச். ஆசீர்வாதப்பர் சபை துறவிகளின் மடம்

குருத்தோலை ஞாயிறு பவனி – நாள்: 01.04.2012 – இடம்: பரி. தமதிரித்துவ சிற்றாலயம், பாளை.





பாவிகளைத் தேடி வந்தவரே - எம்
பாவங்கள் பொறுக்க வல்லவரே
பாடுகள் பட்டு உழைத்தவரே - எம்
பராபரனே உட்செல்லுவீரே.

ஓசான்னா தாவீதின் புதல்வா,
ஓசான்னா ஓசான்னா ஓசான்னா







**Sancta Maria Publications,** 8A/3, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai – 627 002.
Ph: **8903007345**; 0462-2586201; 2572389. email: sspxindia@gmail.com